தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு

துணர் : 61 மலர் : 12

உள்ளுறை பக்கம்

1. பதிப்பிக்கப் பெறாத நிகண்டுகள் ... 529
2. கதையாசிரியர்களும் உத்திகளும் 534
3. காரிக்கிழார் 538
4. கல்வெட்டுத்தமிழில் தொடரியல் அமைப்பு 549
5. ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாளா ....! ? 558
6. ஒருபொருட் பலசொல் - அகராதிப் பதிவு 564
7. தமிழ்ப்பொழில் உள்ளுறை அடங்கல் ... 572

ஆசிரியர் குழு

திரு. ச. இராமநாதன்,
தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்
பேராசிரியர் க. வெள்ளைவாரணன், சிதம்பரம்
சிலம்பொலி சு. செல்லப்பன், எம். ஏ., பி. டி , பி. எல்.,
இயக்குநர், தமிழ்வளர்ச்சித் துறை சென்னை.
டாக்டர் தமிழண்ணல், எம். ஏ., பிஎச். டி ,
தலைவர், தமிழ்த்துறை, மதுரைக்காமராசர் பல்கலைக்கழகம்.
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பி எச்.டி.,
தலைவர், தமிழ் மொழித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.
பேராசிரியர் பி. விருத்தாசலம். எம். ஏ.,
முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார் கரந்தைக் கலைக்கல்லூரி.
பேராசிரியர் சி. கோவிந்தராசன்,
மதுரைக் காமராசர் பல்லலைக் கழகம்.
புலவர் ஆ. பாலன், எம். ஏ., எம் ஃபில்.,
துணை முதல்வர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி,
புலவர் மீனா. இராமதாசு, எம். ஏ.,
தலைமைத் தமிழாசிரியர், உமாமகேசுவரா மேனிலைப்பள்ளி
திரு. பா. மதிவாணன், எம். ஏ., எம். ஃபில்.,
துணைப்பேராசிரியர், தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

பதிப்பாசிரியர் : பேராசிரியர் ச. பாலசுந்தரம்

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2018

துணர் : 61 பிரபவ — பங்குனி மலர் : 12

மார்ச்சு — ஏப்ரல் — 1988

பதிப்பிக்கப் பெறாத நிகண்டுகள்

மா. சற்குணம், எம். ஏ.,
துணைப் பேராசிரியர்,
சி. பா. சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

பதிப்பிக்கப் பெறாத நிகண்டுகளுள் சுவடி நிலையில் கிடைக்கப் பெறும் நூல்கள் பற்றிய செய்திகள் இக்கட்டுரையில் இடம் பெறுகின்றன. கல்கத்தா தேசிய நூலகம், திருவான்மியூரில் உள்ள டாக்டர் உ. வே. சா. நூல்நிலையம், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம் ஆகிய இடங்களில் உள்ள இச்சுவடிகள் குறித்த விவரங்கள் ஈண்டு தொகுத்துரைக்கப் பெறுகின்றன.

அகராதி மோனைக் ககராதி எதுகை:

இந்நூல் குறித்துப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ்ப் பேரகராதியின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்நூலின் ஆசிரியர், காலம் ஆகியன குறித்து ஏதும் அறியக்

கூடவில்லை. இது, கி. பி. 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றியிருக்கலாம் எனக் கருதப் பெறுகிறது.

இந்நூலில் சுமார் 7,500 சொற்கள் பொருள் விளக்கம் செய்யப் பெற்றுள்ளன. இதில், புலவர்களால் கையாளப்பெறும் பல தொடர்ச்சொல் வடிவங்களும், எச்சச் சொற்களும், சொற்றொடர்களும் காணப் பெறுகின்றன. இதன் ஆசிரியர் சொற்களை முதலெழுத்தளவில் மட்டுமின்றி இரண்டாம் எழுத்தளவிலும் அகர நிரற்படுத்தித் தொகுத்தமைத்துள்ளார். இந்நூலின் சொற்பொருள் விளக்கம் செய்யுள் நடையில் இல்லை; எனினும் ஓரளவு நிகண்டு நடையில் அமைந்துள்ளதால்தான் பிள்ளையவர்கள் இதனையும் நிகண்டுகளின் வரிசையில் சேர்த்து எழுதியுள்ளார்.

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளையின் தொகுப்பில் இருந்த இச்சுவடி, இப்போது கல்கத்தா தேசிய நூலகத்தில் (சுவடி எண் : 3024) பாதுகாக்கப்படுகிறது. இந்நூல் 99 ஏடுகளில் எழுதப் பெற்றுள்ளது. நூல் முழுவதும் நல்ல நிலையில் உள்ளது.

அபிதான மணிமாலை:

இந்நிகண்டு திருச்சிற்றம்பலம் இன்னமுதம்பிள்ளை என்பவரால் இயற்றப்பெற்றதெனத் தெரிய வருகிறது. இது, திருவான்மியூரில் உள்ள டாக்டர் உ. வே. சா. நூல் நிலையத்தில் உள்ள சுவடிப் பிரிவில் (சுவடி எண் : 47) பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இது. திவாகர நிகண்டைப் போல நூற்பாயாப்பால் ஆனது. 531 நூற்பாக்களையுடைய இந்நிகண்டு எக்காலத்தது எனத் தெரியவில்லை. இந்நூல் ஒன்பது தொகுதிகளாகப் பகுக்கப் பெற்றுள்ளது. தெய்வப்பெயர், மக்கள் பெயர், விலங்குப் பெயர், மரப்பெயர், இடப்பெயர். பொருட் பெயர், செயற்கை வடிவப் பெயர், செயல் பற்றியப் பெயர் ஆகியவை உள்ளன. இவற்றுள் எட்டாவதாக இருந்த தொகுதி காணப் பெறாமையால் அதன் பெயர் யாதெனப் தெரியவில்லை.

கயிலாய உரிச்சொல்:

தேவூர் கஞ்சமலைக் கவிராயர் என்பரால் இயற்றப் பெற்ற இந்நிகண்டு இதுகாறும் பதிப்பிக்கப் பெறவில்லை. உ. வே. சா. நூல் நிலைய சுவடிப் பிரிவில் 191 என்று எண்ணிப்பெற்ற இந்நிகண்டு அகவற்பாவினால் அமைந்தது. 'கயிலாயம்' என்ற

பெயருடைய மறையவர் பெயரால், இவர் இந்நிகண்டினை இயற்றினார் எனச் சுவடி விளக்கக் குறிப்பில் எழுதப்பெற்றுள்ளது. இந்நிகண்டு குறித்து வேறு செய்திகள் எவையும் தெரியவில்லை.

கைலாச நிகண்டு சூடாமணி :

'கைலாச' என்று உள்ள நூற்பெயரின் முற்பகுதியால் இந்நூலை இயற்றியவர் சைவர் என்பதும், அவர் கைலாசம் என்ற பெயரை யுடையவர் என்பதும் ஊகித்தல் கூடும். கி. பி. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நூல் இயற்றப்பெற்றிருக்கலாம். எனக்கருதுவர். இது, நூற்பா நடையில் இயற்றப் பெற்றுள்ளது. தொகுதிகளின் வகைப்பாட்டில் இது பிங்கலந்தையை ஓரளவு பிற்பற்றியுள்ளது. இதன்கண் உள்ள 56 பிரிவுகளில் முதல் 49 பிரிவுகள் திவாகரத்தின் முதல் பத்து தொகுதிகளுக்கு இணை யானவை எனலாம். விண்ணவர் வகை, விண்ணின் வகை, மண்ணின் வகை எனத் தொடங்கி ஊர்வன இறுதி யாக அமைந்துள்ள இப்பிரிவுகளில் மட்டும் சுமார் 15,000 சொற்கள் பொருள் கூறப் பெற்றுள்ளன எனத் தெரிகிறது. இறுதியில் உள்ள 7 பிரிவுகள், பல்பொருள் குறித்த ஒருசொற் றொகுதியைச் (11 ஆம் தொகுதி) சார்ந்தனவாகும். இப்பிரிவுகள் ஒரு வகையில் எழுத்துக்களின் எண்ணிக்கையை நோக்கி அமைக்கப் பெற்றுள்ளன. ஓரெழுத்து ஒருமொழி, ஓரெழுத்து ஒற்று ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒற்று ஒருமொழி, மூவெழுத்து ஒருமொழி, மூவெழுத்து ஒற்று ஒருமொழி, நாலெழுத்து ஒருமொழி என்று அமைந்துள்ள அப்பிரிவுகளுள் முதற்பிரிவுமட்டும் அகர நிரலில் உள்ளது எனத் தெரிகிறது. இந்நூலை வையாபுரிப் பிள்ளை அவர்கள் பதிப்பிக்கத் தொடங்கி சிறிதளவே அச்சாகிப் பின்னர் நின்றுவிட்டது எனத் தெரிகிறது. அதன்பின் இந்நூல் அச்சாகவில்லை. வையாப்புரிபிள்ளையிடம் இருந்த இந்நிகண்டுச் சுவடி. தற்போது கல்கத்தா தேசிய நூலகச் சுவடிப் பிரிவில் சிதல முற்ற நிலையில் உள்ளதாகத் (சுவடி எண் : 2978) தெரிகிறது.

சொற்சேர்வை பொருட்சேர்வை :

இந்நிகண்டின் ஆசிரியர் பெயர் தெரிந்திலது. நூல் இயற்றப் பெற்ற காலம் குறித்து அறியவும் சான்றுகள் கிடைத்தில, டாக்டர் உ. வே. சா. நூல் நிலையத்தில் சுவடி நிலையில் பாது காக்கப் பெற்றுவரும் (சுவடி எண் : 421) இந்நூல் ஒரு சொல் பல்பொருட்பெயர்த் தொகுதியைச் சார்ந்ததாகும். இது, இருபது தலைப்புகளாகப் பிரிக்கப் பெற்றுள்ளது. சொற்களுக்குப்பொருள் கூறும் அகராதி வரிசையிலான 3441 ஒற்றை வரிச்சொற்றொடர்

களையும், சிலவற்றின் இறுதியில் மட்டும் ஒரு சில விருத்தங்களை யும் பெற்றுள்ளது இந்நூல்.

நவமணிக்காரிகை நிகண்டு

இந்நிகண்டு அரசஞ்சண்முகனார் அவர்களால் இயற்றப் பெற்றது. கி. பி. 1889இல் இது இயற்றப் பெற்றதாகும். திவாகரம் போன்ற நிகண்டுகள் பலருக்குப் புரியாததால் தாம் எளிய முறையில் இதைப் பாடுவதாக ஆசிரியரே நூலின் சிறப்புப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். கட்டளைக்கலித்துறையாப்பில் இயற்றப்பெற்றுள்ள இந்நூல் முழுமையும் அந்தாதித்தொடையில் அமைக்கப்பெற்றுள்ளது.

இந்நூலின் ஒன்பது வகை மணிகள் போன்று ஒன்பது தொகுதிகளில் சொற்களையமைத்துப் பொருள் கூறியுள்ளார். இவற்றுள் முதலில் உள்ள தற்சிறப்புப் பாயிரப் பாடல்கள் 18ம் அவற்றையடுத்து தெய்வப் பெயர்த் தொகுதியும் மட்டுமே கிடைத் துள்ளன. முதற் தொகுதியான தெய்வப் பெயர்த் தொகுதியில் 172 பாடல்கள் பாடப் பெற்றதாகக் கூறுகிறது. ஒரு பாடற் செய்தி. அவற்றுள்ளும் 82 பாடல்களே கிடைத்துள்ளன. இவை நூலாசிரியரின் குடும்பத்தாரிடம் உள்ளதாகத் தெரிகிறது.

நிகண்டு:

சென்னைப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் 'நிகண்டு' என்ற பொதுப்பெயருடன் ஓர் கையெழுத்துப் பிரதி (எண். D. 32) காணப்படுகிறது. இது முழுவதும்கிடைக்கவில்லை. நூற்பா யாப்பில் இயற்றப் பெற்றுள்ள இந்நூலின் இரண்டாவது தொகுதி முதல் 7 ஆவது தொகுதிவரை மட்டுமே கிடைத்துள்ளது. முதல் தொகுதி கிடைக்காமற் போயிற்று 7ஆம் தொகுதிக்குப் பிற்பட்ட பகுதிகளும் கிடைத்தில. அவற்றின் பெயர்களையும் அறிதற்கியலவில்லை.

கிடைத்துள்ள பகுதிகளைக் கொண்டு, இது திவாகரத்தின் முதல் பத்து தொகுதிகளமைப்பில் செய்யப் பெற்றிருக்கக்கூடும் என ஊகிக்கலாம். 2ஆவது மக்கட் பெயர்த் தொகுதியில் 379 நூற்பாக்களும், 3ஆவது விலங்கின் பெயர்த் தொகுதியில் 257 நூற்பாக்களும், 4ஆவது மரப் பெயர்த்தொகுதியில் 320 நூற்பாக் களும், 5 ஆவது இடப் பெயர்த் தொகுதியில் 270 பாடல்களும், 6ஆவது பொருட்பெயர்த்தொகுதியில் 111 பாடல்களும், 7ஆவது செயற்கை வடிவப் பெயர்த் தொகுதியில் 101 நூற்பாக்களும் இடம்

பெற்றுள்ளன. கிடைத்துள்ள நிகண்டுகளுள் வேறு எதனுடனும் இது ஒத்திருப்பதாகத் தெரியவில்லை. எனவே இதனை ஓர் தனி நிகண்டாகவே கருத வேண்டியுள்ளது.

விரிபொருள் நிகண்டு :

இதன் ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. கல்கத்தா தேசிய நூலகத் தமிழ்ச் சுவடிப் பிரிவில் இரண்டு சுவடிகள் இப்பெயருடன் (சுவடி எண்கள் : 3174, 2975) காணப்பெறுகின்றன. இவை வையாபுரிப் பிள்ளையின் சுவடித் தொகுப்பைச் சேர்ந்தனவாகும். இவற்றுள் 3174 என்ற எண்ணுடைய சுவடியின் இறுதியில் 'ஒலி பற்றிய பெயர்த் தொகுதி கவிதை பதினெட்டாகுமே' என முடிகிறது. ஆகத் தொகுதி பத்துக்கு செய்யுள் 288 எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இச் சுவடியின் ஏடுகள் நல்ல நிலையில் உள்ளன.

2975 என்ற எண்ணுடைய சுவடியில் விரிபொருள் நிகண்டின் 11வது தொகுதி மட்டும் இடம் பெற்றுள்ளது. இதன் இறுதியில் 'ஆகப்பாயிரம் உட்பட செய்யுள் 427' எனக் குறிக்கப் பெற்றுள்ளது. இதன் ஏடுகள் மிகவும் சிதலமாக இருப்பதாகத் தெரிகிறது. இவ்விரண்டு சுவடிகளும் விரிபொருள் நிகண்டு பதினோரு தொகுதிகளையுடையது என்பதனையும், அதன்கண் 427 செய்யுள்கள் உள்ளன என்பதையும் நமக்கு அறிவிக்கின்றன. இந்நிகண்டின் யாப்பு மற்றும் இதிலுள்ள தொகுதிகளின் பெயர்கள் ஆகியன குறித்து அறிதற்கியலவில்லை.

மேற்கண்டவற்றான் சுவடிநிலையில் கிடைக்கப்பெறும் எட்டு நிகண்டுகள் பற்றிய செய்திகள் ஓரளவு அறியப்பெற்றன. இவை விரைந்து சோதிக்கப்பெற்று பதிப்பித்து வெளியிடப்படவேண்டும். இல்லையேல், கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாது போனதுபோல் நம் தமிழ் நூற்செல்வங்களை இழந்துவிட நேரிடும்.

"பின் இணைப்பு"

சுவடி நிலையில் உள்ள நிகண்டுகளின் பட்டியல் :

1. அகராதி மோனைக் ககராதி நிகண்டு.
2. அபிதான மணி மாலை
3. கயிலாய உரிச்சொல் நிகண்டு சூடாமணி.
4. கைலாச நிகண்டு சூடாமணி.
5. சொற்சேர்வை பொருட் சேர்வை.
6. நவமணிக் காரிகை நிகண்டு.
7. நிகண்டு.
8. விரிபொருள் நிகண்டு.

(பிரபவ - ஐப்பசி இதழ்த்தொடர்ச்சி)

கதையாசிரியர்களும் உத்திகளும்

டாக்டர் இரா. சண்முகவேலன்,
எம்.ஏ , எம்.பில்., பி.டி., பிஎச்.டி.
தமிழ்ப்பேராசிரியர்,
அ. வீ. வா. நி. திரு புட்பங் கல்லூரி,
பூண்டி-613 503.

3. திராவிட இயக்கம்

தமிழக வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் திராவிட இயக்கத்திற்குச் சிறப்பானதோர் இடமுண்டு.

1916-இல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவில் ஒத்துழையாமை இயக்கத்தை வெற்றியோடு முடித்துவிட்டு இந்தியாவிற்குத் திரும்பினார்; தமது ஒத்துழையாமைக் கொள்கையைக் காங்கிரசில் புகுத்த நாட்டின் பல்வேறு இடங்களுக்குச்சென்று ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபட்டார் பார்ப்பனர்கள் காந்தியடிகளின் செல்வாக்கைக் கண்டு அவர் அணியில் திரண்டனர். எல்லாத்துறைகளிலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்துவதை அறிந்து மனம் நொந்து சர். பி டி. தியாகராய செட்டியார் இந்திய தேசியக் காங்கிரசு இயக்கத்திலிருந்து விலகிப் பார்ப்பனரல்லாதார் நலனுக்காகத் 'தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்' (South Indian Liberal Federation) என்னும் அமைப்பைத் தோற்றுவித்தார். இவ்வியக்கத்தை டாக்டர் சி. நடேசமுதலியார் டாக்டர் டி எம். நாயர், பனகல் அரசர் ஆகியோர் முன்னின்று நடத்தி வந்தனர். தங்கள் கருத்துக்களை வெளியிடவும் மக்கள் மத்தியில் பரப்பவும் ஆங்கிலத்தில் 'ஜஸ்டிஸ்' (Justice) என்ற செய்தித்தாளையும், தமிழில் 'திராவிட'னையும் தெலுங்கில் 'ஆந்திரப் பிரகாசிகா' வினையும் அவர்கள் நடத்தினர். மக்கள் 1917-இல் 'ஜஸ்டிஸ்' நாளேட்டின் பெயராலேயே அவ்வியக்கத்தை 'நீதிக் கட்சி' (Justice Party) என்றழைக்கத் தொடங்கினர்.

காங்கிரசுக் கட்சியின் ஈட்டி முனையாகத் திகழ்ந்தவரும், அக்கட்சியின் செயலர், தலைவர் போன்ற பதவிகளை வகித்தவருமாகிய பெரியார் ஈ. வெ. ரா. மக்கள் தொகை அடிப்படையில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்கிற வகுப்புவாரித் தீர்மானத்திற்கு ஆதரவாக ஐந்து காங்கிரசு மாநாடுகளில் ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து வலியுறுத்தித் தோல்வி கண்டதால் பார்ப்பனர்களின் மேலாண்மையை எதிர்த்துக் காங்கிரசுக் கட்சியிலிருந்து 1925-ஆம் ஆண்டு

நவம்பர் திங்களில் வெளியேறினார். பாமரர் அனைவரையும் பகுத்தறிவுள்ளவர்களாக்கவும், தன்மானமுடையவர்களாக்கவும் விரும்பி, பெரியார் 2—5—1925 இல் 'குடியரசு' என்னும் செய்தி இதழைத் தொடங்கினார். இந்நாளே சுயமரியாதை இயக்கம் (தன்மானத் தமிழர் இயக்கம்) தோன்றிய நாளாகும். இவ்வியக்கம் 1938-இல் நீதிக் கட்சியுடன் இணைந்தது. 1944-இல் நடந்த சேலம் மாநாட்டில் சி என். அண்ணாதுரை தீர்மானம் மூலம், நீதிக்கட்சி திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றம் பெற்றது. பின்னர், சி. என். அண்ணாதுரை திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து 17—9—1949இல் 'திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். இவ்வாறு அமைப்புக்கள் பலவாயினும் அவை அனைத்தும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை உயிரிழை யாகக் கொண்டு செயல்பட்டன. அதன் அடிப்படையிலேயே இன்று காணும் சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டது எனலாம் என்பர். [129]

இத்தகைய வரலாற்றுப் பின்னணியுடன் கூடிய திராவிட இயக்கம், பார்ப்பனர் மேலாதிக்க எதிர்ப்பு, தமிழ்ப்பற்று, இந்தி எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தொழிலாளர் நலன், நாத்திகவாதம், மூடநம்பிக்கை ஒழிப்பு முதலிய கொள்கைகளைக் கொண்டுள்ளது.

> சமுதாயத் துறையிலே சீர்திருத்தம் பொருளாதாரத் துறையிலே சீர்திருத்தம், சமதர்ம குறிக்கோள், அரசியலில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்று விடுதலை, ஆகிய கொள்கைகள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளாகும். [130]

என்று சி. என். அண்ணாதுரை உரைத்தார். ஆகவே, இவ் வியக்கத்தைச் சேர்ந்தோரும் சார்ந்தோரும் இக்கொள்கைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்குத் திரைப்படம், நாடகம், கதை, கட்டுரை நாவல் ஆகிய கலை இலக்கியத்துறைகளைத் தேர்ந்து அவற்றில் பிரச்சாரத்தை ஓர் உத்தியாகப் (Propaganda as technique) பயன்படுத்தினர். இவர்களுடைய சிறுகதைகளையும் நாவல்களையும் ஆராய்ந்தோர் இந்தப் பிரச்சாரத் தன்மையைச் சுட்டிக் காட்டுவதுடன் அவற்றில் கலையழகு இல்லாத் தன்மை யையும் குறிப்பிட்டுக் குறை கூறுகின்றனர் [131] இஃது ஏற்பதற் கில்லை. ஏனெனில், இவ்வியக்கத்தைச் சேர்ந்த இலக்கியப் படைப் பாளர்களுள் பெரும்பாலோர் அரசியல் தலைவர்கள் ஆவர். அரசியலையும் நடத்திக்கொண்டு இலக்கியங்களையும் படைத்துக்

கொண்டு மறுமலர்ச்சிக்குப் பாடுபட்ட திராவிட இயக்கத்தினரைப் போலப் ~~பிறஇயக்கத்தினரைப்போலப்~~பிற இயக்கத்தினர் இல்லை என்பது இங்குக் குறிப்பிடற்குரியது. மேலும், தமிழ்ச்சிறு கதை களைப் பற்றி ஆராய்ந்த கதையாசிரியர் என். ஆர். தாசன்,

> .. ஒன்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை பிரச்சாரமா, பிரச்சாரமின்மையா என்பதல்ல. பிரச்சாரம் என்பது வெளிப்பட்டிருக்கிறது என்பதே கவனிக்கப்பட வேண்டியது. எனவே முழுக்க முழுக்க இது உத்திசம்பந்தமான விஷயமாகவே முடிந்து போகிறது[132]

என்று கருத்துரைப்பது நினைத்தற்குரியது.

திராவிட இயக்கப் புனைகதைப் படைப்பாளர்களுள் சி. என். அண்ணாதுரை, மு. கருணாநிதி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தில்லை வில்லாளன், கண்ணதாசன், கே. ஜி. இராதாமணாளன், பி. சி. கணேசன், அ. மறைமலையான், டி. கே. சீனிவாசன், எஸ். எஸ். தென்னரசு, கே. ஏ. மதியழகன், பண்ணன் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். இவர்கள் பழந்தமிழ்ப் பெருமைகளைத் தமிழர்களுக்கு உணர்த்த தமிழ்மொழியைப் பல்வேறு நிலைகளில் பயன்படுத்த முற்பட்டனர். குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினரது மொழிப்பற்று என்ற அலையின் உந்துதலும் பிறவும் சேர்ந்து டாக்டர் மு. வ, கு. ராஜவேலு போன்றோரை முற்றிலும் இலக்கியத் தமிழிலேயே எழுத வைத்தன என்று சொல்லலாம் என்பர்.[133] எனவே, பிரச்சாரத்தை ஓர் உத்தியாகக் கொண்ட இவர்கள், அப்பிரச்சாரத்தை வெளிப் படுத்தும் சாதனமாகிய மொழியையும் ஓர் உத்தியாகப் பயன்படுத்த தொடங்கினார். சி. என். அண்ணாதுரை அறிமுகப்படுத்திய எதுகை மோனை நயமிக்க அடுக்குமொழி நடையை அவருடைய தொண்டர்களும் பின்பற்றி வருகின்றனர்.

> எதுகை மோனைகள், அடுக்குச் சொற்கள், எதையும் உவமைகளோடு எழுதுவது, பொருளைத் தெளிவாகச் சொல்லாமல் அடைமொழிகளோடும் உவமைக் கதைகளோடும் சொல்லுவது, குழப்பமான கருத்துக் களை மிக நீண்ட வாக்கிய அமைப்புக்களால் தெளிவாக்குவது போல் எழுதுவது, உயர்வு நவிற்சி, கூடிய வரை எழுத்தறிவில்லாத மக்களுக்கு விளங்கும் படிக்கதை,உவமை முதலிய உத்திகளைப் பயன்படுத்தி எழுதுவது ஆகிய தன்மைகள் தி மு க. தலைவர்களின்

தமிழ் நடையின் சிறப்பான அம்சங்கள் 184

என்று நா. வானமாமலை கூறுகின்றார். சி. என். அண்ணாதுரையின் மொழிநடைக்கு ஓர் எடுத்துக்காட்டு :-

> 'தேவி'யைப் பெற்ற பசு, தேனப்பன் குடிசையிலே, இருந்தது. பால் விற்றுப் பணம் சேர்த்து, பட்ட கடன் தீர்த்திடலாம் என்ற திட்டம் கொண்டு, பக்கத்து ஊரினிலே, வட்டிக்குக் கடன் கொடுக்கும் வரதப்பனிடமிருந்து, வாங்கி வந்த இரு நூறு ரூபாயும், வாழையடிச் சந்தையிலே கொடுத்துக் கொண்டு வந்தான், தேனப்பன், பசு ஒன்று.
>
> ('வள்ளியின் தேவி')

இப் பகுதியைப் படிக்கும் போது, கதை பின்னே தள்ளப்பட்டு மொழிநடை முன்னே நிறுத்தப்படுவதைக் காணலாம்.

மு. கருணாநிதியின் 'குப்பைத் தொட்டி' என்னும் சிறுகதையில் குப்பைத் தொட்டி இப்படிப் பேசுகிறது :-

> கட்டிலும் மெத்தையும் கவினுறு மங்கையும் இருந்து விட்டால் பூரணத்துவம் பெற்றதாக முடியாதே! அந்த மங்கையின் மாங்கனியன்ன மார்பகத்தின் மீது தனது மார்பகத்தை வைத்தவாறு பிரார்த்தனைக்குரிய ஆடவன் படுத்திருக்கிறான். யார் அந்த ஆடவன்? ஆடவனா? அல்ல, அல்ல ஆண்டவன்! அந்த ஆண்டவனைப் பிரார்த்திப்பதோ ஆண்டாள் அம்மை! "மலர் மார்பா, வாய் திறந்து எனக்கருள்வாய்!" என்று ஆண்டவனை அழைத்திட விரும்புகிற ஆண்டாள் அம்மையார் அவனைத் தன் இருப்பிடத்திற்கு அழைக்காமல் அவனது பள்ளியறைக்குள்ளேயே போய் விடுகிறார். போனதும் கண்ட காட்சிதான் குத்து விளக்கு எரிகின்ற அறையின் கோலாகலக் காட்சி!

சந்த நயமும் கன்னல் தமிழ்ச் சுவையும் கதை இலக்கியத்தில் ஆட்சி செய்வதை இவ்வெடுத்துக்காட்டால் அறியலாம்.

தொடரும்

காரிக்கிழார்.

சி. கலைமகள் எம். ஏ.
எம். பில். ஆய்வு மாணவி,
தமிழவேள் உமாமகேசுவரனார்
கரந்தைக் கலைக் கல்லூரி.

காரிகிழார் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவர் பாடிய பாடல்களில் ஓரே ஒரு பாடலே சங்கத் தொகை நூல்களில் உள்ளது. அது புறநானூற்றில் அமைந்த ஆறாம் பாடல்; பாண்டியன் பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியது.

பாடற்பொருள் :-

வடக்கே உள்ள பனிதங்கிய இமயமலைக்கு வடக்கும், தெற்கே உள்ள அச்சம் பொருந்திய குமரி மலைக்குத் தெற்கும், கீழ்த் திசையே உள்ள சாகரரால் தோண்டப்பட்ட கடலுக்குக் கிழக்கும், மேல்திசையில் தொன்றுதொட்டு இருந்து வரும் முதிர்ந்த கடலுக்கு மேற்கும், கீழிலிருந்து நிலம், ஆகாயம், சுவர்க்கம் என மூன்றையும் இணைத்து அடுக்கப்பட்ட அடுக்கில் முதற்கட்டாகிய நீர்நிலை சூழ அமைந்துள்ள ஓங்கிய நிலத்தின் கீழும்; நிலத்திற்கு மேழ அமைந்துள்ள கோ உலகத்தினும் அமையாது, அவற்றுக்கு அப்பாலும் அச்சமும் புகழுமாகப் பரந்த அளவையுடன் நின் ஆட்சி பரவியுள்ளது.

தெளிவாகப் பொருளை ஆராய்ந்து சமன் செய்யும் துலாக் கோல் போல நீயும் ஒரு பக்கமும் கோடாது ஆள்க.

நீ செய்யும் போர் வினைக்கு நின்னோடு மாறுபட்ட பகைவர் தேயத்தின்கண் கடல் போன்ற நின் படைகள் குளிப்பது போன்று மேல் விழுந்து உட்புக, மிகுதியாக அடர்ந்த புகரினையுடைய சிறு கண் யானையைத் தடையின்றி நேரே ஏவி, பசிய வயல்கள் சூழ்ந்த அரிய மதிலரண்கள் பலவற்றையும் கைப்பற்றி அவ்வெயில் களில் இருந்த அழகிய நல்லணிகளைப் பரிசிலர்க்கு அவர்தம் வரிசையறிந்த வழங்குகின்றாய். ஆதலால் நின் படை குடி முதலியன சிறக்க.

முனிவர்கள் வணங்கும் முக்கட் செல்வராகிய சிவபெருமானின் கோயிலை வலம் வரும்போது நின்குடையைப் பணியச் செய்க. சிறந்த நான்மறை அந்தணர்கள் நின்னை வாழ்த்த எடுத்த கையின்

முன் நின் முடியினைத் தாழ்த்துக ! நின் பகைவரது நாட்டை நீ எரித்தலால் எழுந்த சுடுகின்ற புகையினால், இறைவ, நின் கண்ணி வாடுக ! வெள்ளிய முத்தாரமணிந்த நின் தேவியரின் ஊடல் கொண்ட ஒளி முகத்தின் முன்னர் நின் சினம் செல்ல இயலாது நிற்க !

வெற்றிகள் எல்லாவற்றையும் வென்று நின் மனத்தகத்து அடக்கிய தனியாத வள்ளன்மையுடைய மாட்சிமைபட்ட தகுதி யுடைய குடுமியே !

பெரும : நீ குளிர்ந்த சுடருடைய திங்களைப் போன்றும் சாய்கின்ற சுடருடைய ஒளிமிக்க கதிரையுடைய ஞாயிற்றைப் போன்றும் இவ்வுலகில் பெறுவாயாக !

பாடலின் அமைப்பு :-

'நாட்டு எல்லை, அறிவுரை, வாழ்த்து, உய்திப்பொருள், அரசனது தன்மை வாழ்த்து என்ற முறையில் பாடல் அமைந் துள்ளது.

திணை துறை பொருந்துமாறு :-

இப்பாடலின் திணை பாடாண்திணை. துறை செவியறிவுறூஉ வாழ்த்தியல், பொருள் மொழிக் காஞ்சியுமாம்.

திணை :-

பாடாண் திணை, பாடப்படுபவனது இசையும் ஆற்றலும் ஓம்பா ஈகையும் அளியும் என்றிவற்றை ஆராய்ந்தறிந்து சொல்லுவது.

இவன் புகழ், வடக்கும் தெற்கும், கிழக்கும் மேற்கும் என் எல்லையமைந்த இந்நிலவுலகில் மட்டுமல்லாது கீழுலகும் மேலுலகும் பரந்து நிற்கின்றது. இவன் தெவ்வர் தேயத்தின் உட்புகுந்து போர் செய்யும் ஆற்றல் மிக்கவன் ; பரிசிலர்க்கு வரிசை அறிந்து நல்கும் பண்புமிக்கவன் ; சினக்க வேண்டியவிடத்துச் சினந்து, தணிய வேண்டியவிடத்துச் சினம் தணியும் இயல்புடையவன்.

துறை :-

இப்பாடலின் துறை செவியறிவுறூஉ. வாழ்த்தியல், பொருண் மொழிக் காஞ்சி ஆகிய துறைகளின் பொருளும் இப்பாட்டில் உள்ளன.

பாண்டியனின் குடை, முடி, கண்ணி, சினம் முதலியவை பணிய வேண்டிய இடங்களையும் தணிய வேண்டிய இடங்களையும் அவனிடம் அறிவுறுத்தினமையின் இது செவியறிவுறூஉ என்னும் துறைக்குரியது.

தன் கதிர் மதியம் போலவும் தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போலவும் நிலமிசை நிலைபெறுவாயாக என்று பாண்டியனை வாழ்த்தினமையின் இது வாழ்த்தியலாகிறது.

உயிருக்கு இம்மை மறுமைகளில் உறுதிதருகின்ற பொருளைக் கூறுதல் பொருண்மொழிக் காஞ்சி.

பாண்டியனிடம் முனிவர் பரவும் முக்கட் செல்வரின் கோயிலை வலம்வருமிடத்து நின்குடை பணிக! சிறந்த நான்மறை முனிவர் நின்னை வாழ்த்த எடுத்த கையின் முன் நின்முடி பணிக; என்று உணர்த்துகிறார்.

'நின் சினம் ஊடல் கொண்ட நின் உரிமை மகளிரிடத்துச் செல்லாது நிற்பதாக' என்று இன்பத்திற்கு ஏது கூறுகின்றார்.

இவ்வாறு அறம் இன்பம் என இம்மைப் பொருள்களைப் பற்றிக் கூறினமையின் இது பொருண்மொழிக் காஞ்சித் துறையாகின்றது.

டாக்டர் உ. வே. சா அவர்கள் பொருண்மொழிக் காஞ்சிக்கு உரிய பாடல்களின் எண்களைத் தம் பதிப்பின் அரும்பதம் முதலியவற்றின் அகராதியில் குறிப்பிடும் போது இப்பாடலின் எண்ணை விடுத்துள்ளமை இங்குக் கருதத்தக்கது.

உவமைகள் :

1) துலாக்கோல் :-

'துலாக்கோல் போல' (புறம் 6-9)

பொருளை ஆராயும் துலாக்கோல் போல ஒரு பக்கம் கோடாது முறை செய்வாயாக என்ற உவமை மூலம் நடுவு நிலைக்குத் துலாக்கோலை உவமையாகக் காட்டுகின்றார்.

2) கடற்படை :-

'கடற்படை குளிப்ப'

கடல்போன்ற படை என்பதைச் சுட்டிக் கூறா உவமமாகக் 'கடற்படை' என்கிறார். அவன் படைகள் கடல் போன்று பகைவர்

தேயத்தின் மேல் விழுந்து உட்புகுந்தது' என்று வழுதியின் படை ஆற்றலுக்குக் கடலை உவமை கூறுகின்றார். மேல் விழுந்து உட் புகுந்தது என்பதைக் குறிக்கும் 'குளிப்ப' என்ற சொல் இங்குச் சிந்திக்கத் தக்கது. இது 'கடல்' என்ற உவமத்தோடு பொருந்த அமைந்த வினைச் சொல்.

3) மதியம்:

'தன்கதிர் மதியம் போல'

நின்னை விரும்பும் மக்களுக்குக் குளிர்ந்த ஒளிவீசும் மதியம் போல மென்மையான அருளாட்சி செய்வாயாக' என்கிறார்.

4) ஞாயிறு:

'தெறுசுடர் ஒண்கதிர் ஞாயிறு போல'

காய்கின்ற ஒளிமிக்க கதிரையுடைய ஞாயிறு போல நின் பகைவர்க்குக் காட்சியுடையவனாய்த் தோற்றுக என்று வாழ்த்து கின்றார்.

புராணக் கதைகளும் நம்பிக்கைகளும் :

புராணங்கள் யாவும் அக்கால மக்களின் சில நம்பிக்கைகளால் தோன்றியவையே.

1) தொடுகடல் :

இன்றைய வருங்கால விரிகுடாவைத் காரிக்கிழர் தொடுகடல் என்கிறார். தொடுகடல்-தோண்டப்பட்ட கடல். உரையாசிரியர் சகரரால தோண்டப்பட்ட சாகரம் என்கிறார்.

2) ஆனிலை உலகம் :-

இன்று தாம் மேலுலகம்-கீழ் உலகம், சொர்க்கம்-நரகம் என்று நம் உலகிற்கு அப்பாற்பட்ட இரண்டு உலகங்களைப் பற்றிய பெயர்களை அறிந்துள்ளோம். ஆனால், மேலுலகம் என்பதற்குக் காரிக்கிழார் ஆனிலை உலகம் என்ற பெயரைக் கூறுகின்றார். 'ஆனிலை உலகம் - கோவுலகம்' என்கிறார் பழைய உரை யாசிரியர்.

நம் உலகிற்கு மேல் வைகுந்தம், கந்தன் உலகம், பார்வதி உலகம், நீலகண்டன் உலகம், கோவுலகம் என்ற முறையில் உலகங்கள் அமைந்துள்ளன என்று காசிகாண்டம் கூறுகின்றது.

கருவூரில் ஆனிலையப்பர் திருக்கோயில் உள்ளது. ஆனிலை என்பது இப்பாடலில் காணப்படுகின்ற சொர்க்கத்தைக் குறிக்கின்ற சொல்லாகவும் இருக்கலாம்.

அவர் காலப் பண்பாடு தான் கைப்பற்றிய பகைவர்களின் அரண்களில் இருந்த நல்லணிகளை, வென்ற அரசன் பரிசிலர்க்கு நல்குவான். தன் குடையோடு தெய்வம் உறையும் கோயிலை வலம் வருவான். அப்பொழுது அரசனின் குடை தாழ்ந்தே இருக்கும்.

நான்மறை அந்தணர்கள் கையெடுத்து வாழ்த்தும் போது அரசன் கூடத் தன் முடியினைத் தாழ்த்த வேண்டும்.

சிவபெருமானது கோயிலில் எப்பொழுதும் முற்றும் துறந்த முனிவர்கள் சிவனை வாழ்த்திக் கொண்டே இருப்பர்.

பகைவனது நாட்டை வென்ற வேந்தர்கள் அதனைத் தீயிட்டுக் கொளுத்துவர்.

துலாக்கோலைக் கொண்டு பொருளைச் சரியாக அளப்பர்.

இவை காரிக்கிழார் பாடல் வாயிலாக அறியலாகும் அக்காலப் பண்பாடுகளாகும்.

ஆசிரியர் வரலாறு :

பெயர் :

காரிக்கிழார். 'இவருக்கு இப்பெயர் ஊரான் வந்தது. காரி என்பது தொண்டை நாட்டில் உள்ள ஓர் ஊர். அஃது இன்று இராமகிரி என்றழைக்கப்படுகிறது', என்பார் உ. வே. சா. அவர்கள்.

மலையமான் திருமுடிச்சாரி என்ற வள்ளல் திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமண்டலப் பகுதியை ஆண்டுள்ளான். இப்புலவர் வாழ்ந்த ஊரும் தொண்டை நாட்டில் இருந்தது என உ. வே சா. குறிப்பிடுகின்றார். இனி காரைக்குடி, காரையூர் என்பன போன்று பல ஊர்கள் பாண்டி நாட்டில் மிகுதியாக உள்ளன. இவற்றில் ஏதாவது ஒன்று அக்காலத்தில் காரி அல்லது காரியூர் என வழங்கியும் இருக்கலாம்.

சமயம் :

இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். சிவனது முக்கண் மீது நம்பிக்கை கொண்டவர். முனிவர்களையும் அந்தணர்களையும் போற்றியவர்.

காலம் :-

இவரால் பாடப்பட்டோன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி. அவனை நேரில் கண்டு இவர் பாடியுள்ளமையால் இவர் அவன் காலத்து வாழ்ந்த புலவர். என்பது தெரிகிறது.

இவர் பஃறுளி ஆறு இருந்த போது வாழ்ந்தவர். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார். 'பஃறுளி ஆற்று மணலினும் பல வாகுக அவன் வாழ்நாள்' என்று வாழ்த்துகின்றார். ஆதலால் நெட்டிமையார் காரிக்கிழார் இருவரும் பஃறுளியாறு இருந்த காலத்து வாழ்ந்தார்கள் என்பது தெளிவாகும்.

சொல்லும் பொருளும் :

மக்களை மாக்கள் என்றழைக்கிறார். மன்னனது உரிமை மகளிரை மங்கையர் என்கிறார். ஆடவரிலே அரசனை இறைவ 'பெரும' என்றும், 'குடுமி' என்று அவன் இயற்பெயர் கொண்டும் அழைக்கிறார்.

இவர் முனிவர் என்ற சொல்லை இரண்டு இடங்களில் பயன்படுத்துகிறார். முதலில் முனிவர் என்ற சொல்லால், முக்கட் செல்வரை வணங்கும் தன்மையுடைய முற்றும் துறந்தோரையும், இரண்டாவதாக நான்மறை நவிலும் நாவுடைய அந்தணரையும் குறிக்கிறார். பகைவரைக் குறிக்கும்போது தெவ்வர், ஒன்னார் என்று இரண்டு சொற்களைப் பயன்படுத்துகின்றார். மன்னனது செய்வினைக்குப் பகைவர் மாறுபடுமிடத்துத், 'தெவ்வர்' என்றும், அப்பகைவர் தோற்றோடிய பின் அவன் நாட்டைக் குறிப்பிடும் போது **'ஒன்னார் நாடு'** என்றும் குறிக்கின்றார்.

சிவபெருமானுக்கு எத்தனையோ பெயர்கள் இருக்க, இவர் முக்கட் செல்வர் என்றழைக்கின்றார். இதனால் நக்கீரரை எரித்த அந்த நெற்றிக்கண் மீது நம்பிக்கை கொண்டவர் என்று எண்ணத் தோற்றுகின்றது.

தெய்வம் இருக்கும் கோயிலை 'நகர்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். நாட்டை 'நகர்' என்ற தமிழ்ச் சொல்லாலும் தேயம் என்ற வடசொல்லாலும் குறிப்பிடுகின்றார்.

'திறம்' என்ற சொல்லை 'ஒரு பக்கம்' என்ற பொருளிலும், படைகுடி முதலாகி கூறுபாடுகள் என்ற பொருளிலும் பயன்படுத்துகின்றார்.

கடலை 'கடல், பௌவம்' என்ற இரு சொற்களால் குறிக்கின்றார். உலகம் தோன்றிய காலத்திலிருந்து இருக்கும் தொன்மைமிக்க கடலைப் 'பௌவம்' என்றும் பிற்காலத்தே செயற்கையாகத் தோண்டப்பட்டதாகக் கருதப்படும் கீழ்க்கடலைக் கடல் என்ற சொல்லாலும் குறிக்கின்றார்.

சுவர்க்கத்தை இவர் ஆனிலை உலகம் என்ற சொல்லால் குறிக்கிறார். உரையாசிரியர் 'கோலோகம்' என்று பொருள் தருகிறார்.

'உரு' என்ற சொல்லை அச்சம் என்ற பொருளில் பயன்படுத்து கின்றார். 'உருகெழு' (2) உருவும் புகழும் (8) என்று இரண்டு இடத்தில் இது காணப்படுகிறது. உருகெழு என்ற இடத்தில் உரிச்சொல்லாவும் 'உருவும் புகழும்' என்ற இடத்தில் பெயர்ச் சொல்லாகவும் உள்ளது.

தெரிகோல் என்ற தொகையைத் துலாக்கோலைக் குறிப்பதற்கு பயன்படுத்துகிறார்.

எமன் என்று சொல்லைச் சமன் என்ற பொருளில் பயன் படுத்தயிருக்கிறார். ஏமன் சமன் என்பன பாடபேதங்களாகவும் டாக்டர். உ வே சா. அவர்களால் குறிக்கப்படுகின்றன. 'தெரி கோல் ஞமன்' என்றதொடர் அகநானூற்றிலும் உள்ளமை சிந்திக்கத்தக்கது. துலாக்கோலின் சமன் என்பது இதன் பொருள்.

குளிப்ப என்ற சொல் படை இன்னொரு நாட்டில் புகுவதைக் குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது. உரையாசிரியர் இதற்கு உட்புக என்று பொருள் கூறுகின்றார்.

மண்டி என்ற சொல் நிறைந்து செல்லுதலைக் குறிக்கப் பயன் படுத்தப்படுகின்றது. 'மிக்குச் சென்று' என்ற உரையாசிரியர் பொருள் கூறுகின்றார்.

'தெனாது உருகெழு குமரியின் தெற்கும்'

இங்குக் குமரி என்றது கன்னியாறு என்றே பழைய உரை யாசிரியரும் டாக்டர். உ. வே. சாவும் கூறுகின்றனர்.

ஆனால் காரிக்கிழார் 'குமரி' என்று குறிப்பிட்டது மலையை; பன்மலை அடுக்கத்துடன் அமைந்த குமரிக் கோட்டை ஆகும்.

புறநானூற்று ஒன்பதாவது பாடலின் இதே பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை வாழ்த்தும் போது நெட்டிமையார் என்ற புலவர் 'பஃறுளி ஆற்று மணலினும் பல காலம் வாழ்க' என்று வாழ்த்துகின்றார்.

'நன்னீர் பஃறுளி மணலினும் பலவே' (புறம் 9) எனவே இக் குடுமிக் காலத்துப் பஃறுளி ஆறு இருந்தது என்பது திண்ணம்.

சிலப்பதிகாரத்துள் அமைந்த,

பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள'

என்று வரிகளால் பஃறுளி ஆறும் குமரிக்கோடும் சேர்ந்தே கடற் கோளால் அழிந்திருக்கின்றன என்பதை அறிய முடிகின்றது. பஃறுளி ஆறு குமரிக்கோட்டிலிருந்து இழிந்து சென்றதாக இருக்கலாம்.

குமரி என்ற சொல் புறநானூற்றில் மூன்று இடங்களில் பயின்று வருகின்றது. புறநானூறு 6, 17, 67.

'தென்குமரி வடபெருங்கல்
குணகுட கடலா எல்லை' (புறம் 17)

இங்குக் குமரி என்றது மலையையே குணகுட கடல் எல்லை என்றவர், குமரி ஆறாக இருந்திருப்பின் தனியாக 'குமரி ஆறு' என்று கூறியிருப்பார். ஆனால் அதுவும் மலையே ஆதலால், வடபெருங்கல்லோடு சேர்ந்து 'தென்குமரி வடபெருங்கல் என்று'' கூறியுள்ளார்.

கதிர் என்ற சொல் நிலவின் ஒளியையும் ஞாயிற்றின் ஒளியை யும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. நிலவின் ஒளி 'தண் கதிர்' என்றும் ஞாயிற்றின் ஒளி 'ஒண்கதிர்' என்றும் தண், ஒண் என்ற அடைமொழிகள் கொண்டு வேறுபடுத்தப்படுகின்றன. எனவே அவர் 'கதிர் என்பதைப் பொதுச் சொல்லாகப் பயன்படுத்தி யுள்ளார். சுடர் என்ற சொல்லை ஞாயிற்றின் ஒளியை மட்டும் குறிக்கப் பயன்படுத்தியுள்ளார்.

பயன்படுத்திய சொற்களின் அகராதி

1. அடர் - அடர்ந்த

2. ஆனிலை உலகம் - சுவர்க்கம் (கோலோகம்)
3. ஆர் - அரிய
4. இறைவ - அரசே
5. ஈகை -
6. உரு - அச்சம்
7. உருவும் - அச்சமும்
8. ஒன்னார் - பகைவர்
9. கதிர் - ஒளி
10. கலன் - அணிகலன்
11. குமரி - குமரி மலை
12. குளிப்ப - மேல்விழுந்து உட்புக.
13. கெழு - பொருந்திய
14. சுடர் — ஒளி
15. செய்வினை - போர்
16. செய்வுறு - அழகுபடச் செய்த
17. செலீஇயர் - தணிக
18. செவ்விதின் - தடையின்றி
19. ஞமன் - சமன்
20. தகை - தகுதி
21. தண்டா - தணியாத
22. திறம் - 1. பக்கம் 2. படைகுடி முதலாகிய கூறுபாடுகள்
23. துனித்த — ஊடிய
24. தெரிகோல் - துலாக்கோல்
25. தெவ்வர் - பகைவர்
26. தெறு - சுடுகின்ற
27. தேஎம் - நாடு
28. தொடுகடல் - தோண்டப்பட்ட கடல் (வங்காளவிரிகுடா)
29. தொன்று - பழையதாக
30. தொன்றுமுதிர் பௌவம் - அரபிக்கடல் (மேற்குக்கடல்)
31. நகர் - கோயில்
32. நான்மறை முனிவர் - அந்தணர்
33. நிலமிசையான் - உலகத்தின் மேல்
34. நீர் நிலை நிவப்பு - நீர்நிலைகண் ஓங்கிய நிலம்
35. படப்பை - பக்கம்
36. பணிபடுநெடுவரை - இமயம்
37. பாசவல - பசிய விளை நிலம்
38 புகர் - நெற்றிப் புள்ளிகள் (யானை)
39 பௌவம - தொன்றுமுதிர் பௌவம் பார்க்க
40. மங்கையர் - மனைவியர்

41. மண்டி - மிக்கு
42 மன்னிய - நிலைபெறுவாயாக
43. மாண் - மாட்சிமைபட்ட
44. முக்கட்செல்வர் - சிவன்
45. முப்புணர் அடுக்கிய - மூன்று ஒன்றன்மேல் ஒன்று பொருந்துமாறு அடுக்கப்பட்ட
46. முறை - அடைவு
47. முனிவர் - 1. முனிவர் 2. அந்தணர்.
48. வரிசையின் - சிறப்பிற்கு ஏற்ப
49. வெகுளி - சினம்

உரிச்சொற்கள்.

1. ஆர் (எயில்)
2. உரு
3. ஒண்
4. கெழு
5. வால் (இழை)

இடைச்சொற்கள் :

1. அத்தை
2. ஆங்க
3. உம்
4. ஏ.

ஒரு பொருட் பன்மொழி :

1. தெவ்வர்
ஒன்னார்
2. தேஎம்
நாடு
3. பெரும
இறைவ

பலபொருள் ஒருமொழி

1. முனிவர்
2. திறர்.

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்

குடா அது தொல் று முதிர் பௌவத்தின் குடக்கும்
கீழது, முப்புணர் அடுக்கிய முறைமுதல் சுட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும் மேலது
ஆனிலை உலகத் தானும் ஆனாது
உருவும் புகழும் ஆகி விரிசீர்த்
தெரிகோன் ஞமன்ன் போல ஒருதிறம்
பற்றல் இலியரோ, நின்திறம் சிறக்க,
செய்வினைக்கு எதிர்ந்த தெவ்வர் தேஅத்துக்
கடற்படை குளிப்ப மண்டி அடர்புகர்ச்
சிறுகண் யானை செவ்விதின் ஏவிப்
பாசவல் படப்பை ஆர்எயில் பல தந்து
அவ்வெயின் கொண்ட செய்வுறு நன்கலம்
பரிசின் மாக்கட்கு வரிசையின் நல்கிப்
பணியியர் அத்தை நின் குடையே முனிவர்
முக்கண் செல்வர் நகர் வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெரும நின் சென்னி சிறந்த
நான்மறை முனிவர் ஏந்துகை எதிரே
வாடுக இறைவ நின் கண்ணி ஒன்னார்
நாடுசுடு கமழ்புகை எறிந்த லானே.
செலியியர் அத்தை நின் வெகுளி வாலிழை
மங்கையர் துனித்த வான்முகத்து எதிரே
ஆங்க, வென்றி எல்லாம் வென்று அகத்து அடக்கிய
தண்டா ஈகைத் தகைமாண் குடுமி
தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும நீ நிலமிசை யானே. புறம் 6

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு

இரா. பாக்யலட்சுமி
பாரதியார் பல்கலைக் கழகம்
கோயம்புத்தூர்.

அதே சமயம் கல்வெட்டுக்களில் கூறப்படும் செய்திகள் விரிவாகவும், மாறுபட்ட பல காலத்தவர்களுக்கும் புரியும் படியும் இருக்க வேண்டும். குறைந்த இடத்தில் நிறைந்த செய்திகளைத் தெரிவிக்க வேண்டும் என்ற அவாவினாலும் நீண்ட தொடர்கள் கல்வெட்டுக்களில் அமைக்கப்பட்டிருக்கலாம். இது போன்ற நிலையினை இன்று பத்திரிக்கைகள் மற்றும் சில செய்தித் தொடர் மூலங்களில் நாம் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. மேலும் பல வாக்கியங்கள் பொதிந்து கிடக்கும் கலவை வாக்கிய அமைப்பானது கல்வெட்டுத் தமிழில் இயல்பாகக் காணப்படுகின்றது. குறிப்பாக முற்றுவினை, வினையெச்சமாக அமையும் நிலையில் இத்தகைய கலப்பு வாக்கியம் அமைக்கப்படுகிறது. இங்கே விளக்கப்படும் கல்வெட்டில் (Bowringpet 38) நான்கு வாக்கியங்கள் அகப்படும் வாக்கியங்களாகவும் (embeddeel sentence) ஒரு வாக்கியம் அகப்படுத்தும் வாக்கியமாகவும் (embedding sentence) அமைந்துள்ளன. அகப்படுத்தும் வாக்கியம் விட்டேன் என்ற வினை முற்றினைக் கொண்டு முடிகிறது. அகப்படும் வாக்கியங்கள் செய்வித்தான், எழுந்தருளுவித்தான், வைத்தான்விட்டான் என்ற வினைமுற்றுக் களைக் கொண்டு முடிகின்றன. கலவை வாக்கியம் (Complex sentence) அமையும் போது இம்முற்று வினைகள் நான்கும் செய்வித்து, எழுந்தருளுவித்து, வைத்து, விட்டு என இறந்தகால வினையெச்ச அமைப்புக்களாக (Past participles) மாற்றல் விதிகள் (Transformational rules) மூலம் மாற்றப்படுகின்றன. ஐந்தாவது அகப்படும் வாக்கியம் முறை வினையடை (Adverb of manner) அமைய இடமளிக்கிறது. பிராமணர் நால்வர், 2 கைச்சகாயத்தவர், தேவரடியார் போன்று 52 குடியும் என்ற பெயர்கள் வினையடையாக (அதாவது முறை வினையடையாக) மாற்றம் பெற்று வழங்குகின்றன. அகப்படுத்தும் வாக்கியத்தின் வினைமுற்றான விட்டேன் என்பதற்கு முன்னர் செய்கைக்குப் பரிஹரமாக என்ற தொடர் அமைந்துள்ளது. இதில் பரிஹரமாக என்பது முறைவினைஅடை இதற்கு முன்னர் வரும் செய்கைக்கு என்பது நான்காம் வேற்றுமையின் வரும் சொல் அமைப்பு.

ஆகவே, இந்தக் கலவை வாக்கிய அமைப்பு இரண்டு முக்கியமான மாற்றல் விதிகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1. மு. வி ———— வி. எ.
இ

எ. கா. வைத்தான் — வைத்து
செய்வித்தான் — செய்வித்து

2. பெயர் ——— வி. அ.
மு

எ. கா. பரிஹாரம் + ஆகா — பரிஹாரமாக

இது போன்ற அமைப்பில் இடம் பெற்றுள்ள அகப்படும் வாக்கியங்கள் அனைத்துமே ஒரு மாற்றல் விதியினால் (transformational rule) இங்கு விளக்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. மேலும் முற்றுவினைக்கு முன்னர் வரும் வினையடைகள் இடம் மற்றும் முறை அமைப்பில் வருவதும் குறிப்பிடத்தக்கது. நான்காவது அகப்படும் வாக்கியத்தில் முறைவினையடை (adverb of manner) இடம் பெறுகிறது. இவ்வகையான கலவை வாக்கிய அமைப்பு எழுத்து வழக்கில் அதிகம் இடம் பெறுவதில்லை. ஆனால் பேச்சு வழக்கில் இது போன்ற அமைப்பு பொதுவாகவும் இயல்பாகவும் காணப்படுகிறது. நம் கருத்துக்களைப் பேச்சின் மூலம் வெளியிடும் போது தனித்தனி வாக்கியங்களாக அமைக்காமல் ஒரு கருத்தினைத் தொடர் நிலையாக வாக்கியங்களைச் சேர்த்தே பெரும்பாலும் நாம் அமைக்கிறோம். அக்காலத்தில் கல்வெட்டினைப் பொறித்தோர் இது போன்ற கருத்து வெளிப்பாட்டு முறையினைப் பின்பற்றியே கலவை வாக்கியங்களை அமைத்துள்ளமை நன்கு தெரிய வருகின்றது. கல்வெட்டு செதுக்கியோருடைய பேச்சு வழக்கும், ஓரளவு கல்வியறிவும் கூட இதற்குக் காரணமாக அமையலாம்.

2.5 பொருள் மயக்கம் தரும் தொடர்கள் (ambiguous phrases)

கல்வெட்டுக்களில் பொருள் மயக்கம் தரும் சிலதொடர்களும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

> "கோயிலில் மடத்து நிர்வாகம் செய்வார் முத்தாண்டார் முத்தரும், வாசாண்டை மகன் பச்சைநாயனும், முளவாயில் சன்மதானப்பெருந் தெருவில் வணிகபுர நாதரான வைஸ்ய வாணிய நகரத்தாரில், வட வாணியன், பெரிய பெருமாள், காமாண்டைச் செட்டியார் இவர்கள் தானமாக நாள்தோறும் ஒரு திருப்பேர்க்கும் ஒருபொழுது படைப்பதாக வாங்கின பொன் 21" (Mulbagal, 74)

பொருள் 1 : வட வாணியன், பெரிய பெருமாள், காமாண்டை செட்டியார் இவர்கள் மூவரும் கொடுக்க முத்தாண்டார் முத்தரும் பச்சை நாயனும் வாங்கிய பொன் ௨1, அல்லது

பொருள் : 2 இந்த ஐந்து பேரும் வேறு யாரோ தானமாகக் கொடுக்க வாங்கிய பொன 21.

"இப்படிக்குத் தானப்பன் உருவும் சமைத்து எழுத்தும் வெட்டுவித்தான்" (Hosakote, 98)

இவ்வெடுத்துக் காட்டில் உருவம் சமைத்தவன் தானப்பனா அல்லது தானப்பன் உருவம் வேறொருவன் சமைத்தானா என்பது பொருள் மயக்கமாக இருக்கிறது.

2.6. விடுபட்ட சொற்களைக் கொண்ட தொடர்கள்

கல்வெட்டுத் தொடர்களில் சில இடங்களில் இரண்டு சொற்களுக்கு இடையில் ஒரு சொல் இருந்திருந்தால் பொருள் மயக்கம் இன்றி இருந்திருக்கும் என்ற நிலையை நாமே ஒரு சில இடங்களில் உய்த்துணர்ந்து கொள்ளக்கூடிய நிலை காணப் படுகின்றது.

செய்வித்த தூப்பும் தொட்டியும் (இவை) (Channapatna 85) இத்தொடருடன் 'இவை' என்ற ஒரு சொல் இறுதியில் வந்திருப்பின் தொடர் வழுவற்றதாக, பொருள் மயக்கம் இல்லாததாக அமைந்திருக்கும். மேலும்,

"சங்க நாயகத்தேவன் ஏரிகட்டி பயிருடன் தேவதான சந்திராதித்த வரை செல்வதாக விட்டேன்." (Srinivasapur 8)

என்ற தொடரில் பெயருக்குப் பின் ஆகிய நான் / எனும் நான் என்ற பண்புருபும் தன்மைச் சொல்லும் பயிருடன் என்ற பெயர்ச் சொல்லுக்குப் பின்னர் செயப்படு பொருளான (நிலம்) என்ற பெயர்ச்சொல்லும் வந்திருப்பின் இத்தொடர் இன்னும் நன்றாகப் பொருள் தரும் தொடராக இருந்திருக்கும்.

2.7 பெரும்பான்மை வரிசைக்கிரமச் செய்திகளைக் கொடுக்கும் தொடர்கள்

மங்கல வாசகம் கல்வெட்டுத் தோன்றிய காலம், கல்வெட்டுச் செய்திகள், கையெழுத்துக்கள் ஒப்படைக்கிளவி என்று

பொதுவாகக் கல்வெட்டுச் செய்திகளை ஐந்து வகைகளாகப் பிரிக்கலாம்.

2.7. (1) மங்கல வாசகம்

ஸ்வஸ்திஸ்ரீ (Kolar, 18; Mulbagal, 179a) இச்சொல்லே மங்கல வாசகம் எனப்படுகிறது. இச்சொல் ஏறக்குறைய எல்லாக் கல்வெட்டுக்களிலுமே காணப்படுகிறது. எப்போதுமே மங்கலமாகத் துவங்க வேண்டும் என்ற நியதி அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தமையை **ஸ்வஸ்திஸ்ரீ** என்ற துவக்கச் சொல்லின் மூலம் அறியலாம்.

2.7. (2) கல்வெட்டுத் தோன்றிய காலம்

கல்வெட்டு எழுதப்பட்ட காலத்தை

அ. (ச)''கரெயாண்டு ஆயிரத்திரு நூற்றொருபத்தஞ்சு சென்று ஆறாமாண்டான விஜய சம்வத்சரத்து தைமாதம் இருபத்தாந்தியதியில்'' (Kolar, 18)

ஆ. ''வியவருஷத்து வைகாசி மாதம் முதல்'' (Malur, 39)

இ. ''சகாப்தம் 1233 இதன்மேல் செல்லா நின்ற கலியுக வருஷம் 4412. இதன் மேல் விரோதிகிருது வருஷத்கி மகர ஞாயிற்று பூர்பபக்ஷத்து தசமியும் புதன் கிழமையும் ரோகினியுமான நாள்'' (Mulbagal, 179 a)

ஈ. ''சர்வ பூச்சக்கரவத்திகள் ஸ்ரீபோசள வீரராமனா தேவற்கு யாண்டு 37வது'' (Kolur, 234)

என்று மேற்காணும் முறையில் குறிப்பிடுகின்றனர். இப்பகுதியில் சகரவருஷம், நூற்றாண்டு, அதுகழிந்து 6ஆம் ஆண்டு போன்று குறிப்புகளுடன் குறிப்பிடும் முறை காணப்படுகிறது. ஒரு ஆண்டு மிகச்சிறப்பான ஆண்டாகவும் அதைக்குறிப்பிடின் எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் இருப்பதையும் கொண்டு அந்த ஆண்டினைக் குறிப்பிடும் முறையும் இருந்தது. மேலும் சகாப்தத்தினையும், கலி வருஷத்தினையும் குறிப்பிடுகின்ற முறையும், வீரபுருஷரான அரசர்கள் ஆட்சி செய்யும் ஆண்டினையோ அன்றி அவர்கள் ஆட்சியாண்டினையோ குறிப்பிடும் முறையும் காணப் படுகின்றது. இதனை நாம் மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுக் களின் மூலம் அறியலாம்.

2. 7 (3) கல்வெட்டுச் செய்திகள்

இப்பகுதியில் கல்வெட்டுத் தொடர்கள் நீண்டனவாகவும், அடைகள் பல கொண்டனவாகவும் அமைந்துள்ளன.

எ. கா : ஸ்வஸ்திஸ்ரீ மனுமகா மண்டலேஸ்வர மாலராஜராஜ மலெ பொருள் கண்ட சமுப்ராதி வதியாயுள்ள ஸ்ரீவீர வல்லாள தேவர் ப்ருதிவி ராஜ்யம் பண்ணா நிற்க ஸ்வஸ்திஸ்ரீ வட்ட வியாபாரி உபயநானா தேசிகற்கு முக்கியரான கொல்லி யாதிபன், உப்ப நெல்லி புரவராதீஸ்வரன், நடவராதித்யன், நிகரிலி சோழ மண்டலத்து கோளாலநாட்டு நாட்டுநாயகஞ் செய்வார். கோளால நாட்டு கொத்தனூர் கீழ் தெந்தட்டு மண்ட விளாகத்தில் ஸ்ரீகைலாயமான ஸ்ரீமூலஸ்தான முடையார் கோயில் எடுத்து இந்த மடை விளாகத்துக்குச் செல்லுஞ் சூலக்கல்லுக்குள் சதுச்சீமை யும், மாங்குட்டை, தட்டான் குட்டை புற்குட்டையில் மூன்றிலொரு பங்கு, அரக்கிறையில் கண்டகம், கொத்தனூரில் விளர்ங்கிறையில் 2 கண்டகம் கழனி இச் சேக்ஷத்திரத்துக்கு உடையவர்கள் மல்லியூரில் காஸ்யப கோத்திரத்தில் மணியபட்டர் பிள்ளைகள் பெரிய கற்பக பட்டர், சிறுகற்பக பட்டர் இருவருக்கும் நாலத்தொன்று காஸ்யப கோத்திரத்தில் கேரள பட்டர், கௌசிய கோத்திரத்தில் கனக சபாபதி ஆழ்வார் மகன் மூலஸ்தான முடையார்க்கு உதகம் வாத்து குடுத்த க்ஷேத்ரம் (வயல்) னாலத்தொன்று" (Kolar, 82)

2) ஸ்வஸ்திஸ்ரீ நிகரிலி சோழ மண்டலத்துப்புதநாட்டுப் புள்ள தேவ மண்டலிகர் படைவீட்டின் சித்தீஸ்வர முடையார்க்கு ஸ்ரீகாஞ்சி மாநகரத்து வாணிகன் குடிகிழான் எரிகட்டி பயிருடன் தேவதான சந்திராதிதவரை செல்வதாகவிட்டேன். (Srinivasapur, 8)

போன்ற மேற்கூறப்பட்ட இவ்விரண்டு எடுத்துக்காட்டுக்களில் அரசனது மெய்கீர்த்திகள் அரசனது வீரச்செய்திகள் அல்லது அடைமொழிகள், அவரிடம் வேலை செய்பவர் இன்ன நாட்டை, இன்ன ஊரைச் சேர்ந்தவர், இன்னாருக்கு இதைத் தானமாகக் கொடுத்தார். அந்த தர்மம் இத்தனை காலம் செல்லவேண்டும் என்று குறிப்பிடும் பழக்கம் காணப்படுகின்றது. சில கல்வெட்டுக்

களில் இம்முறை மாறி இவர் மகன், இவர் பேரன், இந்த ஊரைச் சேர்ந்தவன் என்று செய்திகளைக் குறிப்பிட்டுக்கூறும் முறையும் காணப்படுகின்றது. இதனை மேற்கூறிய கல்வெட்டுக்களின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

2.7 (4) கையெழுத்துக்கள்

" தானப்பன் உருவும் சமைத்து எழுத்தும் வெட்டுவித்தான் " (Hosakote, 98)

" இவை செல்லப்பிள்ளை எழுத்து" (Kankanahalli, 109 back)

" கல்லிலும் செம்பிலும் வெட்டிக்குடுத்தோம் " (Malur, 39)

" இவை குடையமுழான் எழுத்து " (Hosakote, 162)

" இசாசனம் எழுதினேன் இவ்வூர் ஊர்காணக்கண் பிராமணன் அறங்கள் உறீமயரென இவை என் எழுத்து " (Channapatna 42 a)

" இவை நின்றார் எழுத்து. நாட்டுக்கணக்கண் பெரிய பிள்ளை எழுத்து " (Bangalore, 115)

போன்ற இவ்வெடுத்துக்காட்டுக்களின் மூலம் அறச்செயல்களுக்குத் தொடர்புடையவரின் கையொப்பம் சான்றாக இருந்தோர். அதனை வெட்டியவன் இன்னான், செய்வித்தான் இன்னான் என்பன போன்ற பல செய்திகளை நாம் அறிந்து கொள்ள முடியும். பெரும்பான்மைக் கல்வெட்டுக்களில் இச்செய்திகள் முழுமையாக இருப்பதில்லை.

2.7 (5) ஓம்படைக்கிளவி

ஓம்படைக்கிளவி என்னும் இப்பகுதியில் ஒரே வகையான வாசகம் பெரும்பான்மை காணப்படும். இவை கல்வெட்டுக்களின் இறுதிப்பகுதியாகும்.

" ஹரி " (Channapatna 42 a)

" இத்தன்மம் ஸ்ரீவைஷ்ணவர் ரக்ஷை " (Bowring pet. 7 b)

" ஸ்ரீமாஹேஷ்வர ரக்ஷை " (Bowring pet. 27, 30)

" இத்தன்மம் போற்றினார் புன்ய கர்மாவாம் " (Malur 5)

போன்ற மங்கலமாக முடிகின்ற வழக்குகள் பல கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. மேலும்,

"இத்தன்மத்துக்கு இலங்கணம் பண்ணினவன்
கங்கைக் கரையில் குரால் பசுவைக்
கொன்றான் பிரம்ம ஹத்தி"
(Bowring pet 27 & Mulbagal 100)

என்ற இச்சொல் வழக்கு பெரும்பான்மையான கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது.

இம்முறையில் கூறின் பாபம் செய்யப்படுவான் என்ற எண்ணத்தில் இவ்வாறு கடுமையாகக்கூறப்பட்டிருக்கலாம். மேலும் இவை தர்மத்தை பாதுகாக்கும் காப்புப் பொருளிலும் கூறப்பட்டன எனலாம்.

மேலும் கிணறு, மரம் போன்ற எல்லைக்குட்பட்டவற்றைக் குறிப்பிடும் முறையும் எல்லை வரையறைச் செய்திகளைக் குறிப்பிடும் முறைகளும் இக்காலப்பட்டயங்களின் முறையை ஒத்திருக்கின்றன.

"இந்த தர்மத்துக்கு லங்கனம் பண்ணினார்
உண்டாகில் கங்கைக் கரையில் குரால்
பசுவைக் கொன்ற பாவங்கொள்ளக்
கடவர்கள்" (Bangalore, 98)

மேற்கூறப்பட்டுள்ள இவ்வெடுத்துக்காட்டில் ஓம்படைக்கிளவி என்னும் பகுதியில் மட்டுமே **உண்டாகில்** என்ற முறையில் **நிபந்தனைத் தொடர்கள்** (conditional phrases) காணப்படுகின்றன. கல்வெட்டின் மற்றெந்தப் பகுதியிலும் இந்த நிபந்தனைத் தொடர்கள் இல்லை. மேலும் **எதிர்மறைத் தொடர்களும்** (negative phrases) வேறெந்த இடத்திலும் காணப்படுவதல்லை. ஓம்படைக்கிளவி என்னும் இப்பகுதியில் மட்டும் வெகுசில கல்வெட்டுத் தொடர்களில் மட்டும் எதிர்மறைத் தொடர்கள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக,

"இது ஆமல்ல என்றவர் கெங்கைக்கரையில்
குரால் பசுவைக் கொன்ற பாவத்திலே
போகக் கடவராக சாதனங்குடுத்தோம்"
(Hosakote, 109 back)

பெரும்பான்மைக் கல்வெட்டுக்களில் இதை **நிறுத்தினவன் தடுத்தவன்** என்று வினையாலனையும் பெயரிலேயே கூறப்படுகின்றது. மேலும்,

"அறவறவர்க்கு அறம் அல்லது துணையில்லை" (Mulbagal 34)

"அறம் மறவற்க" (Channapatna 97)

போன்ற சில எதிர்மறைத் தொடர்களும் பல கல்வெட்டுக்களின் வாயிலாக அறிய முடிகின்றது.

பெரும்பான்மைக் கல்வெட்டுச் செய்திகள் தோன்றா எழுவாயில் வரும் தொடர்கள் பலவினை எச்சங்களை உள்ளடக்கிய தொடர்கள், செயப்படுபொருள் குன்றிய வினைத் தொடர்கள் (Intransitive) காரணவினைத் தொடர்கள் (Caustive) என்ற முறையிலேயே காணப்படுகின்றன. அதாவது வெட்டப்பட்டுள்ளன. மேலும் வினாத்தொடர்கள் கல்வெட்டுக்களின் எந்தப் பகுதியிலுமே காணப்படுவதில்லை. இதற்குக் காரணம் கல்வெட்டுக்கள் பெரும்பாலும் செய்திகளை அறிவிக்கும் சாதனங்கள் என்பதே.

எ. கா. "சந்திராதித்தவரை செலுத்தக்கடவோமாக கைக் கொண்டோம் இம் மூவோம்" (Mulbagal, 42 b)

என்ற இக்கல்வெட்டுத்தொடரின் மூலமும்

"இப்படிக்கு இவை பெப்மி நாயக்கன் எழுத்து" (Malur, 8) என்ற இக்கல்வெட்டுத்தொடரின் மூலமும் முறையே வினைப் பயனிலை, பெயர்ப்பயனிலைத் தொடர்களில் பெரும்பான்மை செய்திகள் கூறப்பட்டுள்ள நிலையினை உணரலாம். மேலும் எழுவாய் மறைந்து தோன்றா எழுவாயாக நிற்கும் தொடர்களே கல்வெட்டுச் செய்திகளில் அதிகமாகக் காணப்படுகின்றன.

"இச்சந்திக்கு இரண்டு திருவிளக்கு ஏற்றுவதாக ஒரு பொன் குடுத்தேன் தந்திரபாலன் தமையன் நீரணிஞ்சாரென"
(Mulbagal, 53)

என்ற இவ்வெடுத்துக்காட்டின் மூலம் நீரணிஞ்சான் என்ற நான் என்பதை நாம் உணர முடிகின்றது. 'என' என்ற மேற்கோள் இடைச்சொலுடன் (Quotative) முடியும் தொடர்கள் எல்லாமே தோன்றா எழுவாய்த் தொடர்களாகும். (Derived subjects).

இக்கல்வெட்டுச் செய்திகளில் வரும் தொடர்களில் சிலவற்றில் எ. கா. "செலுத்தக்கடவோம்" (Bowring pet, 26) "இதுக்குக் கடவன் உதையபட்டரர்" (Kolar, 75) என்ற இவ்விரண்டு தொடர்களும் வியங்கோள் வினையாகக் கொள்ளின் முதல் எடுத்துக்காட்டை கடப்பாட்டுப் பொருளிலும் இரண்டாவது

எடுத்துக்காட்டுக் கட்டளைப் பொருளிலும் கூறலாம். இதனை வினையாலணையும் பெயர்த்தொடராகவும் கொள்ளலாம். ஒரு சில கல்வெட்டுக்களே பார்த்திருக்கின்ற காரணத்தால் இதனை இன்னும் அறிதியிட்டு உறுதியாகக் கூறமுடியவில்லை.

"இதைத் தடுத்தவர்கள் கங்கைக் கரையில் குரால் பசுவைக் கொன்றார் பாவத்தில் போககூடவராக" (Hosakote 109) மேற்கூறப்பட்ட இவ்வெடுத்துக்காட்டு வைதல் பொருளிலும் வருகின்றது. சில இடங்களில் வாழ்த்தல் பொருளிலும் தொடர்கள் அமைந்துள்ளன. இவை ஓம்படைக்கிளவி என்னும் பகுதியில் மட்டுமே வருகின்றன.

முடிவுரை

கல்வெட்டுத்தமிழில் சொற்றொடர் அமைப்பு ஆய்வு மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். இதன் மூலம் அக்காலப்பேச்சு வழக்கு எப்படி இருந்தது, சொற்றொடர் அமைப்புக்கள் எவ்வாறிருந்தன, சொல்லாட்சி எவ்வாறு அமைந்திருந்தது. பொருள் வெளிப்பாடு எங்ஙனம் அமைக்கப்பட்டிருந்தது போன்ற பல்வேறு செய்திகளை நம்மால் அறியமுடிகிறது.

கல்வெட்டுக்கள் இன்றேல் நாம் அக்கால நாகரிகம், அரசர்கள், மக்கள் அவர்களின் வாழ்வியல் அறங்கள் போன்ற பல செய்திகளை ஓரளவிற்குத் தெளிவாக அறிந்திருக்கமுடியாது. சில செய்திகளைக் கொண்டு நாம் ஓரளவு ஊகித்துணர முடிந்தாலும் இவ்வாறு அழியாத உறுதியான செய்தித்தொகுப்புக்கள் நமக்குக் கிடைத்திருக்கா. தமிழ்மொழி எந்தெந்த இடங்களில் பரவியிருந்தன என்பதனையும், காலத்திற்கு காலம் தமிழ்மொழி எவ்வாறு வேறுபட்டது என்பதையும் பிறமாவட்டங்களில் அவை கலந்திருக்கின்ற நிலையினையும் அறியும் ஆய்விற்கு இன்றியமையாத துணையாக இருப்பவை இக்கல்வெட்டுக்கள்; அவை பற்றிய ஆய்வுகள்

மேற்கோள் நூல்கள் :

1) தி. வை, சதாசிவப்பண்டாரத்தார் (1977) **கல்வெட்டுக் கூறும் உண்மைகள்**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

2) கி. அரங்கன் (1985) **தொடரியல் மாற்றிலக்கண அணுகுமுறை** தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3) Agesthialingom, S and S. V. Shanmugam (1971) *Language of Tsmil Inscriptions (1250 - 1350AD)* Annamalai University : Annamalainagar.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாளா....!?

கவிஞர் கண்ணிமை

[முதற்குலோத்துங்கன் வாழ்வு முடிந்து அவன் மகன் விக்கிரமசோழன் அரியனை ஏறி ஆட்சி நடத்திக் கொண்டிருந்த காலம்

அந்த கால நிலையில் அறிவும் ஆணவமும் இரண்டறக் கலந்த ஒட்டக்கூத்தர் இருந்தார்; வெண்பாவில் புலியாகவும். தன் னடக்கத்தில் சிகரமாகவும் இருந்த புகழேந்தி வாழ்ந்தார். இருவர் திறனையும் கண்டு தெளிந்த ஔவை மூதாட்டியும் அவர் களுக்கிடையே முத்தாக அமைந்திருந்தார். இவர்கள் மூவரும் சோழவள நாட்டில் சங்கமமான போது நடந்த சுவையான செய்தி இதோ :-

பாண்டியன் பெற்ற பைங்கொடியை மணந்து அவன் தந்த சீதனப் பொருள்களோடு தன் நகருக்கு வருகிறான் விக்கிரம சோழன்! அவனோடு அவனது அவைக்களப் புலவரான ஒட்டக் கூத்தரும் பாண்டியன் தந்த சீதனப் பொருள்களுள் ஒன்றான புகழேந்தியும் வருகின்றனர்.

மங்கலக்கோலத்தோடு மாமன்னன் வருகிறானென்றால் மக்கள் மகிழ்ச்சிக்கு அளவிட்டுச் சொல்ல முடியுமா என்ன?

எங்கும் விழாக்கோலம்! யாருடைய முகத்தைப் பார்த்தாலும் முல்லைப்பூ முறுவல்; செங்காந்தள் சிரிப்பு; கோங்குப்பூ உற்சாகம்; வெட்கிப்பூ ஆரவாரம்!

மன்னன் வருகையை அறிவிக்கும் மங்கல முழக்கத்தைக்கேட்ட மாநகர்க் குடியினர், மன்னர் வரும் வழியெல்லாம் நின்றிருந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் அதே சமயத்தில், அரண்மனை வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் இரண்டு கால்களையும் நீட்டி அமர்ந்து கொண்டிருந்த ஔவை மூதாட்டி வருவோர் - போவோரை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.

மன்னனும் மாதேவியும் நகர எல்லையைக் கடந்து அரண்மனை வீதியை நெருங்கிக் கொண்டிருந்த சமயம்......

வெற்றிச் சிறந்பும், வீரச்செறிவும் நிறைந்த வெண்கொற்றைக் குடை முதலில் காட்சி அளிக்கத் துவங்கியது. அந்தக் காட்சியைக் கண்ட ஔவையார் தாம் நீட்டியிந்த கால்களில் ஒன்றை மடக்கினார். ஊர்வலம் நெருங்கியதும் மன்னரோடு வரும் புகழேந்தியைக் கண்டதும் மற்றொரு காலையும் மடக்கினார். அதன் பிறகு அவருக்குப் பின்னால் அறிவை, ஆணவத்தால் இழந்து தவிக்கும் கூத்தரின் முகத்தைக் கண்டதும் மடக்கிய இரண்டு கால்களையும் மீண்டும் நீட்டினார்.

இந்தக் காட்சிகளை முதலிலிருந்தே கவனித்து வந்தவர் ஒட்டக்கூத்தர் மட்டுமல்ல, புகழேந்தி மட்டுமல்ல, விக்கிரம சோழனும் தான்! விவரம் புரியாமல் விவரம் புரியாமல் விழித்தான் வேந்தன்!

கூத்தரின் நெஞ்சில் கொதிப்பேறியது! விழிகள் இரண்டிலும் தீப்பொறி பறந்தன. கோபாவேசத்தால் உதடுகள் உராய்ந்தன.

ஔவை மூதாட்டியார் தட்டுதடுமாறியபடி எழுந்தார். தம்மை நாடிவரும் தார்வேந்தனையும் மாதேவியாரையும் கண்டளவில் கைகூப்பித் தொழுதவண்ணம் இருவரையும் ஒருமுகப் படுத்தி வாழ்த்தினார். பிறகு புகழேந்தியாரை வணங்கி நலம் விசாரித்தார். இவ்வளவையும் கண்ட இறுக்கமான கூத்தர் பேசாமல் இருந்து விடுவாரா, என்ன? எல்லோரையும் தள்ளிக் கொண்டு ஔவையின் முன்வந்த கூத்தர், "ஏ, கிழவி! உனக்கு என்ன ஆணவம்? — என்று விளித்ததும் மன்னனும் மாதேவியும் துணுக்குற்றனர். புகழேந்தியின் மேனி சிலிர்த்தது!

விடுவாரா ஔவை?

"என்னடா கூத்தா! என்ன?" என்று அலட்சியமாகக் கேட்டார்.

"என்னவென்று என்னையே கேட்கிறாயா? நீ செய்த தவறு உனக்கே தெரியவில்லையோ?"

"தவறா! அதுவும் இந்த மங்கல நேரத்தில் இப்படியும் ஒரு கற்பனையா உனக்கு?" — சொல்லிவிட்டுச் சிரித்தார்.

"கற்பனையல்ல ... கண் கூடாகக் கண்ட காட்சி" — என்றதும் மன்னரும் புகழேந்தியும் கூத்தரின் குற்றச்சாட்டைப் புரிந்து கொண்டனர். அப்படியானால் ஔவைக்கு மட்டும் தெரியாமல் போகுமா? இருந்தும், என்ன கண்டாய்?" எனக் கேட்டார்.

"என்னையே கேட்கிறாயா! ஆமாம்! ... இதற்கு முன்பு என்னைப் பார்த்ததுமே இரண்டு கால்களையும் செருக்கோடு நீட்டினாயே அது ஏன்?

அவர் வாய் விட்டுச் சிரித்து விட்டுச் சொன்னார். "ஓகோ! அதுவா? ... கேட்க வேண்டிய கேள்வியைத்தான் இப்போது நீ கேட்டிருக்கிறாய்! சரி, தெரிந்துகொள்! முறைசெய்து காக்கும் மன்னன் வருகையைக் காட்டும் வெண்கொற்றைக் குடையைக் கண்டதால் ஒரு காலை மடக்கினேன்; இரண்டாவதாக அறிவிற் சிறந்த புகழேந்தி வருவதைக் கண்டேன்; அவரது அறிவிற்கும் திறமைக்கும் தரவேண்டிய மதிப்புக்காக மற்றொரு காலை மடக்கினேன். மூன்றாவதாக படித்திருந்தும் பக்குவமின்றி நடக்கும் உன்னைக் கண்டேன். அதனால் மடக்கிய கால்களை மீண்டும் நீட்டிக்கொண்டேன். இப்போது அதற்கென்ன?"

"என்னவா! என்னைவிட நீ போற்றிப் புகழும் புகழேந்தி எந்த விதத்தில் உயர்ந்தவர்?" என்றதும், அரசியின் ஆத்திரப் பார்வை ஒட்டக்கூத்தரின் மீது ஊடுருவிப் பாய்ந்தது! ஆனாலும் அரசியார் வாய்திறந்து கேட்காமல் ஔவை மூதாட்டியின் முகத்தை ஊடுருவலானார்.

"கூத்தா! ஒன்றாயிருந்தால் உடனே சொல்லி விடலாம்! உன்னைவிட எல்லா விதத்திலும் உயர்ந்தவராக இருக்கும்போது இந்த இடத்தில் எப்படி நான் விளக்க முடியும்? என்றதுமே அது வரையிலும் ஊமை வடிவத்தில் நின்றிருந்தசோழன் இப்போது பேச ஆரம்பித்தான்.

"அம்மையே! நான் போர்க்களப் பயிற்சியைப் பெற்றவனே தவிர, உங்கள் புலமைக்கள பயிற்ச்சியை ஒரு துளியும் பெற்றவனல்ல! ஆனாலும் என் மனதுக்குப் பட்டதைச் சொல்கிறேன். ஒருவரையொருவர் தாழ்த்திப்பேசிக் கொள்வது சரியல்லவே!"

"விக்கிரமா! இந்த நல்ல கருத்தை என்னைப்பார்த்துச் சொல்லியிருக்கக் கூடாதே! உங்கள் அவைக்களப் புலவரைப் பார்த்தல்லவா சொல்லிருக்க வேண்டும்?" என்றதுமே மீண்டும் ஒட்டக்கூத்தரின் ஓங்காரக் கூக்குரல் எழுந்தது!

"ஔவையே! விபரீதத்தை விலை கொடுத்து வாங்காதே!"

கூத்தா! நான் வாங்கத் தயாராயில்லை; ஆனால் வாங்க விரும்புவருக்கு நான் என்றுமே நந்தியாக இருந்ததில்லை!

"மீண்டும் சொல்கிறேன். ... நீ நினைத்துக் கொண்டிருக்கும் அளவுக்கு என்னைவிட எந்த விதத்திலும் புகழேந்தி உயர்ந்தவரல்ல!"

"உண்மையாகவா?"

"நிச்சயமாக!"

"இதை உறுதிப்படுத்துவதற்கு இந்த இடத்தையே 'உரைகல்' ஆக்குவோமா?"

"ஊம் ... நான் தயார்! நீ என்ன கேட்கப் போகிறாய்?"

"கூத்தா! கேட்க என்ன இருக்கிறது! சோழ நாட்டின் நீர் வளத்தையும் நில வளத்தையும், அதனினும் சிறந்த செங்கதிர்ச் செல்வனின் பெருமையையும் உள்ளடக்கி ஒரு பாடல் பாட வேண்டும். முடியும் அடியில் முறையாக மூன்று மதி வர வேண்டும். அப்படிப் பாட நீ தயாரா?"

"இந்தக் கேள்வியை நீ நேசிக்கும் புகழேந்தியைப் பார்த்துக் கேள்! நான் தயார்!"

ஔவை மூதாட்டியின் விழிகள் இவ்வளவுக்கும் பேசாமல் புன் முறுவலிக்கும் புகழேந்தியின் மீது திரும்பின.

"ஐயனே!" - என்றார் ஔவை.

"அம்மையே! நீங்கள் விரும்பிய போதே நான் தயாராகி விட்டேன்!" - என்றார் புகழேந்தி.

"நான் பாடத் தொடங்கட்டுமா அல்லது நீ பெரிதாக எண்ணிக் கொண்டிருக்கும் புகழேந்தியைப் பாடச் செய்கிறாயா?" என்றதுமே விக்கிரம சோழன் இடைமறித்துச் சொன்னான்.

"ஐயனே! நீங்களே பாடுங்கள்!" - மன்னனின் கட்டளை பிறந்ததுமே பாடத் தொடங்கினார் கூத்தர்.

"வெள்ளத் தடங்காச் சினவாளை
வேலிக் கமுகின் மீதேறி
துள்ளிமுகிலைக் கிழித்து மழைத்
துளியோ டிறங்குஞ் சோணாடா!

கள்ளக் குறும்பர் குலமறுத்த
கண்டா வண்டர் கோபாலா !
பிள்ளை மதிகண் டெம்பேதை
பெரிய மதியு மிழந்தாளே !''

என்றதுமே வாய்விட்டுச் சிரித்தார் மூதாட்டி! விக்கிரம சோழன் விபரம் புரியாமல் மருண்டான். கூத்தரும் தம்முடைய தவறை தாம் உணராமல், கொதிப்பேறிய குரலில், ''ஏ, கிழவி' ஏன் சிரிப்பு ?'' — என்றார்.

"எட்டா ! விட்டாய் ஒரு மதியை !'' என்றதுமே அங்கிருந்த அனைவருமே மருட்சி பெற்றனர். ஒட்டக் கூத்தரின் வீரம் செறிந்த சொல்லலங்காரத்தில் சொக்கிப்போயிருந்த அத்தனை பேரும் மூன்று மதிக்கு ஒரு மதியை விட்டு விட்ட கூத்தரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தனர்.

அசடு வழிந்தது !

ஆணவம் அறிவைக் கெடுக்கும் என்பது மட்டுமல்ல, ஆவியையும் போக்கவல்லது என்பதை உணர்ந்திருந்தும் உணர்ந்து தெரியாதவர் போல் பாடிமுடித்த கூத்தர் ஒடுக்கமானார். புகழேந்தியைக் கண்ட ஔவையார்,! ''ஐயனே! இப்போது நீங்கள் பாடலாம்'' ! என்றதும் அவர் பாடத் தொடங்கினார்.

''பங்கப் பழனத் துழுமுழவர்
பலவின் கனியைப் பறித்ததென்று
சங்கிட் டெறியக் குரங்கிளநீர்
தனைகொண் டெறியுந் தமிழ்நாடா !
கொங்கைக் கமரா பதியளித்த
கோவே ராஜ குல திலகா !
வெங்கட் பிறைக்கும் கருப்பிறைக்கும்
மெலிந்த பிறைக்கும் விழிவேலே !''

என்று அவர் பாடியதும் கூத்தரின் முகம் சினத்தாலும் ஆணவத்தாலும் மேலும் சிவந்தது. என்றாலும் அவரால் மறுத்துப் பேச வழிவகை ஏற்பட வில்லையே ! மூதாட்டியின் வாய் பேசாமல் இருக்குமா !

"கூத்தா! அடக்கமில்லாத அறிவு ஒடுங்கத்தான் வழிசெய்யும்! இனியாவது செருக்கை ஒடுக்கி வாழக்கற்றுக்கொள்!" - என்றது.மே வெருட்டென்று திரும்பிய ஒட்டக்கூத்தர் சொல்ல நினைத்ததைச் சொல்ல முடியாமல் ஒடுக்கத்துக்காளாகி நடக்கலானார். விக்கிரம சோழனும் அவன் நாயகியும் மூதாட்டியிடம் விடைபெற்றுக் கொண்டு திரும்பினர். அப்படியானால் அடக்கத்தின் சிகரமான புகழேந்தி மட்டும் பேசாமல் போய்விடுவாரா என்ன? அவரும் ஔவை மூதாட்டியிடம் விடை பெற்றுக் கொண்டு மன்னரின் பின்னால் செல்லும் சீதனப் பொருள்களோடு ஒன்று கலந்தார்.

அப்போது ஔவையின் விழிகள் ஊர்வலத்தை மட்டுமல்ல, **ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்பாளா?!** எனக் கேட்பதுபோல் – ஒட்டக் கூத்தரின் ஒடுக்கத்தையும் தெளிவாகக் கண்டன.

ஒருபொருட் பலசொல் - அகராதிப் பதிவு

பெ. மாதையன்,
விரிவுரையாளர்
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

1. அகராதியும் ஒரு பொருள் பல சொல்லும் :

"அகராதி உருவாக்கம்" (Dictionary making) என்பது காலத்தையும், உழைப்பையும் மிகுதியும் ஆட்கொண்டு, எக் காலத்திலும் பயன்படத்தக்க நோக்கு நூல்களைப் (Reference Books) படைத்தளிக்கும் பெரும்பணியாகும். எவ்வகை அகராதி யாயினும் அதில் இடம்பெறும் ஒவ்வொரு பதிவையும் உரிய முறையில் படைத்தளித்தல் என்பது அவ்வகராதியின் தரத்திற்கும் பயன்பாட்டுச் செம்மைக்கும் பெரிதும் துணைபுரிவதாய் அமையும். ஒவ்வொரு பதிவும் தனக்குரிய பதிவியல்புகளைச் செம்மையாக உடையதாய், பயன்பாட்டாளர்களுக்கு எவ்வகையிலும் குழப்பம் விளைவிக்காததாய்த் தன்னளவில் தேவையான விளக்கம் உடையதாய் இருத்தல் வேண்டும்.

சிறப்பாக ஒருபொருள் பல சொற்களைப் பதிவுகளாய் அமைக்கும் பொழுது அகராதிக் கலைஞர் மிகுந்த பொறுப்புடனும், அறிவுத் தெளிவுடனும் செயற்படுதல் வேண்டும். ஸ்டீபன் உல்மென், 'ஒருபொருட் பல சொற்களுக்கு இடையே உள்ள தனித்தன்மைகள் அகராதிக்கலைஞரின் கூர்ந்த மதிக்கு அறிவுச் சவாலாய் அமைகின்றன.[1] எனக் குறிப்பிடுவதைப் போன்று இவ்வொரு பொருட் பலசொற்கள் அகராதிக் கலைஞரின் பெரும்பகுதி நேரத்தையும் ஆட்கொள்ளும் தன்மையனவாய் உள்ளன. இவற்றின் பதிவுகளில் அவர் காட்டும் ஆர்வமும், உழைப்பு மிகுதியும் அறிவுத்தெளிவும் எதிர்காலத்தில் உருவாகும் பல்வகை அகராதிகளுக்கும் ஆய்வு மூலமாய் இருந்து அவை செம்மையாய் உருவாகத் துணைபுரியும்.

2. தமிழ் அகராதிகளில் ஒருபொருள் பலசொல் :

தமிழில் வெளிவந்திருக்கின்ற ஒருமொழி, இருமொழி அகராதிகள் பலவும் ஒருபொருட் பலசொற்களைக் (குறிப்பாக மர இனப்பெயர்கள்) கொடுப்பதில் முறையானதொரு நெறிதனைப் பின்பற்றவில்லை. தெளிவான வரன்முறை இன்றி இப்பதிவுகள் பலவும் அமைந்துள்ளன. ஒருமொழி அகராதிகள் இவ்வகையில் மிகவும் சிக்கல் வாய்ந்தனவாய் உள்ளன. அவை ஒருபொருட் பல

சொற்கள் பலவற்றையும் முறையான குறுக்கு நோக்கீடு (Cross Reference) இன்றிக் கொடுத்திருப்பது இத்தகு சிக்கல்களுக்குக் காரணமாய் அமைந்துள்ளது. கதிரைவேற் பிள்ளையின் தமிழ் மொழி அகராதி 'வஞ்சி' என்பதற்கு 'ஒருகொடி' எனவும் 'நீர்வஞ்சி' என்பதற்கு 'ஒரு வகைப்பிரம்பு' எனவும் பொருள் கூறுகின்றது. ஆனால் இரண்டும் 'பிரம்பு' எனும் கொடியின் ஒருபொருட் பல சொற்கள். சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதி இவ்விரண்டையும் ஒரே தாவரவியற் பெயருடன் கொடுத்துள்ளது. முறையானதொரு பதிப்புப்பணியை மேற்கொள்ளும் பொழுதுதான் இத்தகு குறைபாடுகள் பலவும் நீங்கும்.

அகராதிகளின் பதிப்புப்பணிக் காலத்தே ஒருபொருட் பல சொற்களில் தனி ஆர்வம் காட்டி அவற்றை முறைப்படுத்திப் பதிப்பித்தல் என்பது மிகவும் தேவையான பணியாய் உள்ளது. இருமொழி அகராதியைக் காட்டிலும் ஒரு மொழி அகராதித் தொகுப்பாளர்கள் இச் சொற்களின் பதிப்பு நெறியில் சில வரன்முறைகளைக் கைக்கொள்ளுதல் அவசியம். இது கால நீட்டிப்புக்கு வழிகோலும் என்றாலும் அக்காலச் செலவு பல்வகைக் குறைபாடுகளுக்கும் வடிகாலாய் அமைந்து அகராதிச் செம்மைக்குப் பெரிதும் வழிகோலும்.

தமிழில் வெளிவந்துள்ள அகராதிகளில் பெரியதும், பல அறிஞர் உழைப்பை ஆட்கொண்டதும் இன்றளவும் தமிழின் அகராதிச் செல்வமாய் விளங்குவதுமான சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியும் இவ்வொரு பொருட் பல சொற்களைத் தருவதில் முறையானதொரு நெறிதனைப் பின்பற்றவில்லை. இது இருமொழி அகராதியாக இருப்பதால் ஒரு சொல்லுக்குரிய பொருள் விளக்கத்தைப் பெறுதலில் பெரிதும் சிக்கல் இல்லை என்றாலும் ஒருபொருட் பல சொற்களை அறிந்து தொகுப்பதில் சிக்கல் ஏற்படுகின்றது. இத்தகு அகராதிகள் ஒருமொழி அகராதிகளுக்கு ஆய்வு மூலமாய் பயன்படும் நிலையில் அவ்வொரு மொழி அகராதிகளில் ஒரு பொருட் பல சொற்களை முறையான குறுக்கு நோக்கீட்டுடன், உரிய பொருள் விளக்கங்களுடன் கொடுப்பதில் பல குறைகள் நேர மிகுதியும் வாய்ப்புண்டு.

3. ஒரு பொருட் பலசொல் - பதிவுக் குறைபாடுகள்

தமிழ் அகராதிகளில் ஒருபொருட் பலசொற்கள் வழங்கப் பட்டுள்ள நிலைகளில் நேர்ந்துள்ள குறைபாடுகள் சிலவற்றைக் காண்பதன்வழி இச் சொற்களின் அகராதிப் பதிவுகளில் கடைப் பிடிக்க வேண்டிய நெறிகள் சிலவற்றை உய்த்துணரலாம். பின்வரும்

பல்வகை எடுத்துக் காட்டுகளும் சென்னைப் பல்கலைக் கழகப் பேரகராதியினின்றும் எடுத்தாளப்பட்டுள்ளன.

8. 1 எடுத்துக்காட்டு - 1

1 அருநெல்லி	A species of goose berry balsam tree, l. tr., Garuga Pinnata, மரவகை
கருவேம்பு	Black neam tree ; l. tr., கறுப்பு வேப்பமரவகை. Garuga Pinnata.

அருநெல்லி என்பது இங்குக் கருவேம்பு மரத்தைச் சுட்டும் ஒருபொருட் பன்மொழி. இரண்டு சொற்களும் ஒரே பொருளில் வருகின்ற போதிலும் இரண்டும் வெவ்வேறு வகையான ஆங்கிலப் பொருள் விளக்கம் பெற்றுள்ளன. ஒருமொழி அகராதித் தொகுப்பாளர் தாவரவியற் பெயரை (Botanical name) நோக்காத நிலையில் இவ்விரு சொற்களும் தனித்தனிப் பதிவுகளாய் அமைய வாய்ப்புண்டு.

8. 2 எடுத்துக்காட்டு - 2

1 இருள் மரம்	ஒருவகைப் பெரிய மரம் Iron wood of Ceylon, l. tr., Mesua ferra
2 சிறுநாகப்பூ	மரவகை Iron wooq of Ceylon, l. tr., Mesua ferra.
3 சிறுநாகம்	See இருள் மரம்.
4 சுருளி	இலங்கை மரவகை Iron wood of Ceylon, l. tr., Mesua ferra.
5 நாகப்பூ	See சிறுநாகப்பூ

இவ்வைந்து சொற்களும் ஒருபொருளின. மேலே காட்டப்பெற்ற ஐந்து சொற்களில் 1, 2. 4 என்பன தனித்தனியே வெவ்வேறு வகையான தமிழ்ப் பொருளுடன் தரப்பட்டுள்ளன 3 - க்கு 1-உம், 5 - க்கு 2 - உம் குறுக்கு நோக்கீடாய்க் கொடுக்கப்பட்டுள்ளது. ஒருமொழி அகராதித் தொகுப்பாளர் ஆங்கிலப்பொருள், தாவரவியற்பெயர் இரண்டையும் கவனத்தில்கொண்டு ஒருபொரு-]

பலசொற்களாய் இவற்றைத் தொகுத்துக் கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

8. 8 எடுத்துக்காட்டு - 8

1 இரட்டகத்துத்தி — கத்தூரி வெண்டை
Musk mallow, hairy shrub ;
Hibiscus abelmoschus

2 கத்தூரி வெண்டை — See இரட்டகத்துத்தி
Musk mallow.

இங்கே இரண்டு சொற்கள் ஒன்றுக்கொன்று குறுக்கு நோக்கீடாய்க் கொடுக்கப்பட்டிருப்பினும் தமிழ்ப் பொருள் விளக்கம் இடம் பெறவில்லை. இப்பொருளில் வரும் பிறசொற்களும் தமிழ்ப் பொருள் விளக்கம் பெற வாய்ப்பில்லை ; அவை இவ்விரண்டில் ஒன்றைக் குறுக்கு நோக்கீட்டுச் சொல்லாய் மட்டுமே பெற்றிருக்கும்.

8. 4 எடுத்துக்காட்டு - 4

1 ஆவிமா
2 கம்பி
3 கும்பி
} Carey's myrtle bloom, l. tr.,
Careya arborea.
மரவகை.

இம்மூன்று சொற்களும் ஒரே வகையில் விளக்கப்பட்டிருப்பினும் எவ்விதக் குறுக்கு நோக்கீடும் இன்றித் தனித்தனியே கொடுக்கப் பட்டுள்ளன. தாவரவியற்பெயர், ஆங்கிலப் பெயர் இரண்டிலும் கவனம் செலுத்தித் திரட்டாவிடின் ஒருமொழி அகராதியில் இவை மூன்று பதிவுகளாய் இடம் பெறவும் வாய்ப்புண்டு,

8. 5 எடுத்துக்காட்டு - 5

1 வஞ்சி — See வஞ்சிக்கொடி.

2 வஞ்சிக்கொடி — கொடிவகை
Common rattan of South India, m cl. **Calamus rotang**

3 பிரம்பு — Rattan, கொடிவகை
m.cl. **Calamus rotang.**

4 நீர்வஞ்சி — ஆற்றில் வளரும் கொடிவகை
Calamus rotang.

இவற்றுக்கான ஒருபொருட் பல சொற்களுக்குச் சில இடங்களில் 'வஞ்சி' எனவும் வேறு பிற இடங்களில் 'வஞ்சிக்கொடி' எனவும்

இன்னும் சில இடங்களில் 'பிரம்பு' எனவும் குறுக்கு நோக்கீடு கொடுக்கப்பட்டுள்ளது. சில சொற்களுக்குப் 'பிரம்புவகை' எனப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒன்றைத் தலைச் சொல்லாய்க் கொண்டு அதை மட்டுமே குறுக்கு நோக்கீடாய்க் கொடுத்தல் வேண்டும்.

3. 6 எடுத்துக்காட்டு – 6

1 பிடவம் See பிடவு
2 பிடவு See பிடா
3 பிடா Bedaly emetic nut
See குட்டிப்பிடவம்.
4 குட்டிப்பிடவம் Bedaly emetic nut,
ஒருவகை மரம்
Pandia malabarica.

எனும் நான்கு சொற்களில் 1 - க்கு 2 - உம், 2 – க்கு 3 - உம் 3 – க்கு 4 - உம் குறுக்கு நோக்கீடாய்க் கொடுக்கப்பட்டுள்ளது. நான்காவது சொல் மட்டுமே பொருள் விளக்கம் பெற்றுள்ளது- இதில் மிகுதியும் சிக்கல் உண்டு. இங்கே இரண்டாவது அல்லது மூன்றாவது சொல் விடுபட்டு விடாமல் பார்த்துக் கொள்ளும் கூடுதல் பொறுப்பும் அகராதிக் கலைஞர்க்கு உண்டு, இத்தகைய குறுக்கு நோக்கீட்டு முறை.பயன்பாட்டாளர்க்குச் சலிப்பை உண்டு பண்ணும். பயன்பாட்டாளரின் நேரத்தை மீதப் படுத்துவதாய்க் குறுக்கு நோக்கீடு அமைதல் வேண்டும்.

3. 7 எடுத்துக்காட்டு - 7

I பாடலி 1 See பாதிரி (மலை)
Trumpet flower tree ;
See பாதிரி (மூ. அ.)

II பாதிரி 1 பொன்னிறமுள்ள பூவுடைய
மரவகை Yellow flowered fragrant
trumpet flower tree.

2 சிவப்புப் பூ மரவகை
Purple flowered fragrant
trumpet flower tree.

3 வெள்ளைப் பூவுடைய மரவகை
White flowered fragrant
trumpet flower tree.

அகராதி, இலக்கியம் ஆகியவற்றிலிருந்து திரட்டப்பட்ட சொற்களுக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட பொருளுடைய சொற்களைக் குறுக்கு நோக்கீடாய்க் கொடுக்கும் பொழுது அப்பல பொருட்களில் எப்பொருளைக் கொள்வது - என்பது சிக்கலாய் உள்ளது. பிற அகராதிகளிலிருந்து திரட்டப்பெற்ற 'பாடலி', 'பாண்டுரை' எனும் சொற்களுக்குப் 'பாதிரி'க்குக் கொடுக்கப்பட்ட மூன்று பொருளில் எதனை கொள்வது.

சாம்பசிவம் பிள்ளையின் மருத்துவ அகராதி பல்வகைப்பட்ட செம்மையான செய்திகளைக் கொண்டிருந்த போதிலும் முறையாகப் பதிப்பிக்கப்படாத காரணத்தால் இதனினும் மேலான பல குறைகளைக் கொண்டுள்ளது. இவ்வகராதி ஒரே சொல்லுக்கு (மரப்பெயர்ச் சொற்கள்) இரண்டு மூன்று பதிவுகளைக் கொடுத்துள்ளது. எடுத்துக் காட்டாகச் 'செம்மரம்' எனும் சொல் மூன்று பதிவுகளாய்க் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றும் பல பொருள்களைக் கொண்டுள்ளது, இந்நிலையில் ஒரு சொல்லுக்குக், காண்க 'செம்மரம்' எனக் குறுக்கு நோக்கீடு கொடுக்கும் நிலையில் அச்சொல்லுக்கு அப்பல பொருட்களில் எதனைக் கொள்வது ?

மேற்கண்ட இரண்டு வகையான குறுக்கு நோக்கீட்டு நெறியில் குறுக்கு நோக்கீட்டுச் சொல்லுடன் பொருள் எண், ஒரே சொல் ஒன்றுக்கும் மேற்பட்ட தலைச் சொல்லாய் இடம்பெறும் நிலையில் தலைச் சொல்லின் எண், அல்லது ஆங்கிலப் பெயர் ஆகியவற்றைக் கொடுத்தல் வேண்டும். இத்தகு நிலையில் பின்வருமாறு சொல், பொருள் எண்ணிட்டுப் பதிவுகளை அமைக்கலாம்.

(எ.டு.) 1. குடைவேல் — umbrella thorn babul
See உடை[5] 1 (தி.வா)
2. மயிக்கம் — See பிரம்பு 1 (பரி. அக)
3. பிசின் — See பிரம்பு (பிங்.)
Rattan palm

4. செய்தி சேகரிப்பும் பதிப்புப் பணியும்

ஒரு பொருட் பல சொற்களின் பதிவமைப்பு நிலையில் நேர்ந்துள்ள இத்தகு பல்வகைப்பட்ட குறைபாடுகளையும் தீர்க்கும் வகையில் அகராதிகளின் செய்தி சேகரிப்புப் பணியும், பதிப்புப் பணியும் அமைதல் வேண்டும். செய்தி சேகரிக்கும் காலத்திலேயே ஒருபொருட் பல சொற்களைத் திரட்டுதலில் சில வரன்முறைகளைக் கைக்கொள்ள வேண்டும். ஒருமொழி அகராதித் தொகுப்பாளர்

இருமொழி அகராதித் தொகுப்பாளரைக் காட்டிலும் கூடுதல் கவனங் கொண்டு ஆங்கிலப் பெயர், தாவரவியற்பெயர் ஆகியவற்றுடன் செய்திகளைத் திரட்டிக் கொள்ள வேண்டும். இவ்விரண்டன் அடிப்படையில் தான் ஒருபொருட் பல சொற்களை ஒருங்கே திரட்டமுடியும். மரஇனப் பெயர்களைப் பொறுத்தமட்டில் ஆங்கிலப் பெயர்களைக் காட்டிலும் தாவரவியல் பெயர்களை மிகுதியும் கருத்தில் கொண்டு ஒருபொருட் பன்மொழிகளைக் திரட்டுதல் வேண்டும்.

பதிப்புப் பணிக் காலத்தே, முறையான குறுக்கு நோக்கீடு இல்லாத சொற்களுக்கான தாவரவியற் பெயர், ஆங்கிலப் பொருள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு சொல்லுக்கான பன்மொழிகளை ஒருங்கே திரட்டிக் கொள்ள வேண்டும். இவ்வாறு திரட்டப்பெற்ற பல்வகைப் பெயருளுள்ளும் வழக்கு நோக்கி பலர்க்கும் தெரிந்ததொரு சொல்லைத் தலைச் சொல்லாய்த் தெரிவு செய்து கொண்டு ஒரு பொருளுக்கான பன்மொழிகட்கும் அதனையே குறுக்கு நோக்கீட்டாய்க் கொடுத்தல் வேண்டும். மேற்கண்ட பல்வகைச் சிக்கல்களும் தீர இத்தகைய குறுக்கு நோக்கீட்டு நெறி பெரிதும் துணைபுரியும்,

5. ஒருபொருட் பலசொல் - பதிவமைப்பு நெறிகள்

5. 1 ஒருசொல் - ஒருபொருள்

ஒரே ஒரு (தலைமைப்) பொருளுடைய A எனும் ஒரு சொல்லுக்கு B, C, D, E, F - எனும் சொற்கள் ஒருபொருட் பல சொற்களாய் வரும்பொழுது இவற்றை B காண்க, A, C காண்க A என A எனும் தலைச் சொல்லைக் குறுக்கு நோக்கீடாய்க் கொடுத்தல் போதுமானது. இது ஒவ்வொரு சொல்லையும் ஆங்காங்கே விளக்கிக் கொண்டிருப்பதால் ஏற்படும் காலக்கழிவை நீக்குவதுடன் குறைபாடுகள் ஏதும் நிகழாதும் காக்கிறது. இங்கே நாம் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தெரிந்தெடுக்கப்பட்ட தலைச்சொல்லை போதுமான தெளிவான பொருள் விளக்கமுடையதாய் அமைத்தல் வேண்டும். எச்சூழலிலும் இச் சொல் விடுபட்டுப் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

5. 2 ஒருசொல் - பலபொருள்

A, B எனும் இரு சொற்கள் பல பொருள்களை உடைய சூழலில் B யின் 3, 4 எனும் பொருள்கள் A யின் 5, 6 இன் பொருள்களில் வரும்பொழுது B யின் 3, 4 ன் பொருட் பகுதியில் A 5, 6 இன ஆங்கிலப் பெயரையும், A எனும் தலைச் சொல்லையும்

குறுக்கு நோக்கீட்டாய்க் கொடுத்தல்; அல்லது காண்க A 5, காண்க A 6 எனத் தலைச் சொல்லுடன் பொருள் வரிசை எண்ணைக் கொடுக்கலாம். தலைச் சொல்லில் கொடுக்கப்பட்ட ஆங்கிலப் பெயரையோ அல்லது பொருளையோ இங்கேயும் அப்படியே கொடுத்தல் வேண்டும். தலைச் சொல்லோடு ஆங்கிலப் பெயர், பொருள் வரிசை எண் ஆகியவற்றையும் கொடுக்கலாம்.

A — பொருள் 1
பொருள் 2
பொருள் 3
பொருள் 4
பொருள் 5
பொருள் 6

B — பொருள் 1
பொருள் 2
பொருள் 3
பொருள் 4

—ஒத்த பொருள்கள்

எனும் ஒத்த பொருட் சூழலில் B யின் 3 - 4 எனும் பொருட் பகுதிகளைப் பின்வரும் மூன்று நிலைகளில் அமைக்கலாம்.

I B - 3 - A 5 இன் ஆங்கிலப் பொருள் + காண்க A
4 - A 6 இன் ஆங்கிலப் பொருள் + காண்க A

II B - 3 - காண்க A 5
4 - காண்க A 6

III B - 3 - A 5 இன் ஆங்கிலப்பொருள் + காண்க A 5
4 - A 6 இன் ஆங்கிலப்பொருள் + காண்க A 6

ஒருமொழி அகராதியில் இரண்டாவது முறைப்படிதான் குறுக்கு நோக்கீடு கொடுக்கமுடியும். எண் கொடுப்பதில் கவனமாக இருக்கவேண்டும். இருமொழி அகராதிகளில் மேற்கண்ட மூன்று வகையிலும் குறுக்கு நோக்கீடு கொடுக்கலாம் என்றாலும் பன்னிரண்டு வழிகளே சிறப்புடையன. பன்னிரண்டு குறுக்கு நோக்கீட்டு முறைகளும் அயன்மொழி தெரியாத தாய்மொழி யாளர்க்கும், அயன்மொழியாளர்க்கும் பொதுவாய்ப் பயன்படும் தன்மையன.

5. 3 இலக்கியச் சொற்கள்

அகராதி, இலக்கியம் இவற்றிலிருந்து திரட்டிக் கொடுக்கப் படும், சொற்களுக்கு ஒன்றற்கு மேற்பட்ட பொருளுடைய பதிவுகளைக் குறுக்கு நோக்கீட்டாய்க் கொடுக்கும் பொழுது

(தொடரும்)

தமிழ்ப்பொழில் உள்ளுறை அடங்கல்

துணர்: 61. பிரபவ ஆண்டு. மலர்கள் 1 — 12

தொகுப்பு: எஸ். செந்தில்குமார்

எண்	ஆசிரியரும் கட்டுரையும்	இதழ்	பக்கம்
1.	**அய்யாப் பிள்ளை. சிங்கை**		
	குடும்பப் பெயராய்வு. (பரவாக்கோட்டை கிராமம்)	7	289
2.	**அரசு, வீ.** *எம்.ஏ.,பிஎச்.டி.*		
	1. தமிழ் இலக்கிய வரலாற்றில் ஜீவா - சில குறிப்புகள்	6	241
	2. நாட்டுப்புறநிகழ்த்துக் கலை-களுக்கான ஆய்வு முறையியல்	10	463
3.	**அறிவியல் பண்ணை**		
	பாம்புகள் பற்றிய சில உண்மைகள்.	9	421
4.	**அழகப்பன், ஆறு. முனைவர்**		
	திருக்குறள் தேசிய நூற் கருத்தரங்கு	11	492
5.	**இசரயேல், மோ. டாக்டர்.**		
	தமிழில் ஞகரமொழி முதற் சொற்கள்.	4	174
6.	**இராதா செல்லப்பன், டாக்டர்.**		
	பேராசிரியர் கே. என். சிவராஜ பிள்ளையின் இலக்கியப்பணி	9	385
7.	**இராசகோபாலன், நா.** *எம்,ஏ.,பி.டி.,பி.ஜி.எல்.பி.எச்டி..*		
	1. தமிழுக்கும் சிந்தி மொழிக்கும் உறவு-புதிய கண்டுபிடிப்பு	3	133
	2, வனப்புக் கோட்பாட்டின் வளர்ச்சி வரலாறு	4	145
8.	**இராமசாமி, மு.** *எம்.ஏ., எம். ஏ., பிஎச்.டி.,*		
	தெ. பொ. மீயின் முல்லைப்பாட்டு ஒரு மனங்கொள் திறனாய்வு	4	159

9. இராமமூர்த்தி, இராம.

1. மயேச்சுரர் கூறும் யாப்பியற் செய்திகள் 6,7 285, 304
2. நற்றத்தனார் யாப்பு 10 481

10. இராமராவ், த. சா. புலவர்.

1. வாதவூரடிகளும் புதுவை ஆண்டாளும் 1 13
2. தசரதன் உரிமை மாந்தர் 2 88
3. மதியுடம்பட்ட மாக்கட் சீதை 3 135
4. வள்ளுவர் குறளுக்கு கம்பன் தரும் விளக்கம் 5,6 212,246

11. இராமானுஜம், சே.

அபத்தங்களைப் பற்றிய நாடகம் 10 449

12, இளந்திரையன். சாலை

தமிழ்ப்பெரு வெள்ளம் 1 29

13. இளவழகன் அமுத. எம்.ஏ ,பி.எட்.,

கரைசேர்க்கும் கருணை 8 341

14. ஈசுவரப்பிள்ளை, த.

சிந்தாமணி காட்டும் சமுதாய தரப் பிரிவுகள் 9 425

15, கண்ணிமை கவிஞர்,

1. ஒரு வீரனின் நெகிழ்ச்சி...... 9 413
2. ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாளா ? 12 558

16. கந்தசாமி, சோ. ந. முனைவர்

ஐரோப்பிய யாப்பியல் — ஓர் அறிமுகம் 2 79

17. கலைமகள், சி. எம்.ஏ.,

காரிக்கிழார் 12 538

18. காளிதாசன், ஆறு, எம்.ஒ.எல்,பி.எட்.,

1. வில்லியின் பாரதம் — ஒரு கண்ணோட்டம் 2,3 94,143
2. கரந்தைத் தமிழ்ச் சங்கமும் திருக்குறள் நெறிவிளக்கமும் 10 433

19. குணசேகரன், மா. பி.எஸ்ஸி.,டிப்.ஏ.எஸ்.,
ஐராவதீஸ்வரர் கோயிலில்
சுந்தரமூர்த்தி நாயனாரின் சிற்பக் காட்சிகள் 8 337

20. குலேந்திரன், ஞான.
1. அம்மையார் பாடிய மூத்த திருப்பதிகங்களின் இசை 1 24
2. தேவாரப் பதிகப் பண்கள் 6 281

21. கோவிந்தராசனார், சி.
முள்ளிக்குளம் ''பேய்க்கு வாள் வழங்கு கொற்றத்தான்'' கோயில் ஆராய்சிக் குறிப்பு. 3 109

22. சண்முகம், என்.
ஆண்ட தமிழகம் 11 480

23. சண்முகவேலன், இரா. எம்.ஏ.,எம்.பில்.,பிஎச்டி.,
கதையாசிரியர்களும் உத்திகளும் 1,2,3 4.12 8.61,137, 217, 534

24, சற்குணம். மா. எம்.ஏ.,
பதிப்பிக்கப் பெறாத நிகண்டுகள் 12 529

24. சாமி, பி.எல்
கள்வரா ? களவரா ? 1 10

25. சாமிநாதன், ந. மு. கோ.
ஐம்பொறி நுகர்ச்சிகள் 7 320

26, சிங்காரவேலன், சொ,
உமாபதி தேவநாயனாரின் தளைக் கொள்கை 2 97

27. சிவகாமசுந்தரி, சு.
பாரதியாரின் பார்வையில் பத்திரிகை 1 3

28. சுகுமாரன்,
மக்களைத் தேடும் கலைஞன் 10 454

29. சுபாசுசந்திரபோஸ் எம்.ஏ.பிஎச்.டி.,
ஒரு நூற்பா — விளக்கம் 10 470

30. செந்திில்குமார், எஸ். *எம்.ஏ.,எம்.பிஎல்.,*
மணிக்கொடி இயக்கமும் தமிழ்ச் சிறுகதைகளும் 11 495

31. செல்வராசு, நா. *எம்.ஏ.,எம்.பில்.,*
சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள் 6 268

32. சேகரன், சாத்தூர்.
தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குமரிக் கண்டத்தின் சான்றுகள் 11 487

33. ஞானசம்பந்தன், சொ.
சிரிப்பு 10 478

34. திருநாவுக்கரசு, க. த.
சங்க காலம் — ஒரு மறு ஆய்வு 4,6 193,248

35. தெய்வநாயகம். சி, கோ, *எம்.ஏ.,எம்.பில்.பிஎச்.டி.,*
தஞ்சை ஊர்ப்பெயராய்வு 4 154

36. பதிப்பாசிரியர்,
1. பாவேந்தர் நூற்றாண்டு விழாவை சிறப்பாக நடத்த அரசுக்கு வேண்டுகோள் 2 49
உ. தமிழ் வழிபாடு - உச்சநெறி மன்றத்தில் வழக்கு 5 209

37, பாக்கியலெட்சுமி, இரா,
கல்வெட்டுத் தமிழில் தொடரியல் அமைப்பு 11,12 523,549

38. பாலசுந்தரம், ச,
1. தொல்காப்பியம் செய்யுளியல் காண்டிகையுரை 1 33
186,236
உ. ஐய வினாக்கள் 4,5,7 334,380
8, 9 417

39 பூரணசந்திரஜிவா,
மாமூலனார் காலம் ஒரு வரலாற்று ஒப்பாய்வு 11 500

40. பெருமாள், ஏ, என். டாக்டர்.

இரட்டைக் காப்பியத்தில் மாதவி	3	116

41. மதிவாணன், பா. *எம்.ஏ.,எம்.பில்.,*

1. இயேசுபிரான் பிள்ளைத்தமிழ் - மதிப்புரை	1	27
2. புதுமைப்பித்தனின் படைப்புகள் (தொகுதி I) - ,,	7	301
3. முகில்களின் மீது நெருப்பு.	10	456

42. மாணிக்கம், மு, *எம்.ஏ.,பிஎச்.டி ,*

பழந்தமிழிசை	4	180

43. மாதையன், பெ,

1. எவ்வழி நல்லவர் ஆடவர்	8,9	367,392
2. ஒருபொருட் பலசொல் — அகராதிப்பதிவு	12	564

44. மோகனராசு, கு. *எம்.ஏ.பிஎச்.டி.,*

அறம் - ஒரு பழைய தமிழ்நூல்	2	55

45. ராஜேந்திரன், பெ.

தமிழ் இஸ்லாமியர் திருமண வழக்கு அரபுச் சொற்கள்	5	230

46, லோச்சன், டி. எஸ், டாக்டர்.

யாழும் வீணையும்	8	349

47. வீரணன், க. மா. *எம்.ஏ.,*

தமிழிலக்கியத்தில் ஓசோன் வாயு	8	347

48. வீரப்பன்,

மவுனமொழி	9,10	432,446

49, வெங்கடாசலம். புலமை.

உச்சநீதி மன்றம்	1	21

50. வெங்கடாசலம், சோ.

1. பெண் கொலை மறுத்தல்	8	364
2. இறைச்சி	10	459

வேண்டுகோள்

இலக்கியம் இலக்கணம் சமயம் தத்துவம் வரலாறு கல்வெட்டு கலை பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் வேண்டப் பெறும். கட்டுரைகள் 4-6 பக்க அளவில் அமைதல் நலம். நெடிதாயின் வகைப்படுத்துத் தருதல் வேண்டும். ஒரு பக்கத்தில் தட்டச்சு அல்லது தெளிவான கையெழுத்தில் அமைதல் வேண்டும். ஆசிரியர் குழு தேர்ந்தளிக்குங் கட்டுரைகளே வெளியிடப் பெறும். இன்றியமையாத அடிக்குறிப்புக்களே சேர்க்கப்படும். தேரப்பெறாத கட்டுரைகள் திருப்பி யனுப்பப் பெறா ஆதலின் கட்டுரைகளைப் படியெடுத்துக் கொண்டு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

தமிழ்ப் பொழில் ஆசிரியர் குழு

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடுகள்

யாழ் நூல் — ஆசிரியர் விபுலானந்த அடிகள்	ரூ.	50 00
கட்டுரைப் பொழில் தமிழ்ச்சங்க மணிவிழா மலர்	ரூ.	30 00
கட்டுரைப் பூங்கா (தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் நூற்றாண்டு நினைவு வெளியீடு)	ரூ.	60 00
இராசராச சோழன் முடிசூடிய 1000 ஆவது ஆண்டுவிழா நினைவு சிறப்பிதழ்	ரூ.	6 00
கபிலர் – நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார்	ரூ.	4 00
நக்கீரர் —நாவலர் ந மு வேங்கடசாமி நாட்டார்	ரூ.	3 00
மெய்ஞ்ஞானத்தின் கொலுவிருக்கையில் அஞ்ஞானத்தின் வழக்கீடு- பா. வே. மாணிக்க நாயக்கர்	ரூ.	2 00
கவியரசு நினைவு மலர்	ரூ.	1 00
தமிழரசி குறவஞ்சி	ரூ.	0 75

பிற வெளியீடுகள்

கரந்தைக் கோவை [ச. பாலசுந்தரம்]		
கலைக் கூத்தன் கவிதைகள்	ரூ.	4 50

விற்பனைக் கழிவு 20% உண்டு அஞ்சற் செலவு தனி

தலைவர்
கரந்தைத் தமிழ்ச் சங்கம்
தஞ்சாவூர்-613 002.

Regd. No. TN/TB/24.

நூல் அஞ்சல்

பெறுநர்

ஆசிரியர்

திருமிகு தஞ்சை சரபோஜி மன்னர் சரஸ்வதி மஹால் நூலக கட்டடம் அரண்மனை வளாகம் தஞ்சை

ஆசிரியர்,
தமிழ்ப்பொழில்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்,
தஞ்சாவூர் - 613 002.

தமிழ்ப் பொழில் கட்டணம்

		உள்நாடு	வெளிநாடு
தனியிதழ்	ரூ.	2 50	3 00
ஆண்டுக் கட்டணம்	ரூ.	30 00	60 00
வாழ் நாள் கட்டணம்	ரூ.	250 00	600 00

வெளியிடுபவர் திரு. ச. இராமநாதன், தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்-613 002
அச்சிடுபவர் திரு. M. சந்திரசேகரன், [illegible] அச்சகம், 1887/1, [illegible], தஞ்சாவூர் - 613 00[illegible].